# உதயன்

சுடர் : 36
கதிர் : 244 | வெள்ளிக்கிழமை | ஆடி 14 ஆம் நாள் 30 ஜூலை 2021 | வள்ளுவர் ஆண்டு 2052 | பக்கங்கள்: 20 விலை: 30 | செய்தி : 021 493 0000 விளம்பரம்: 021 493 1111


## மூதாட்டியின் இரு கைகளிலும் அடுத்தடுத்து இரண்டு தடுப்பூசி

யாழ்ப்பாணம், ஜூலை 30
யாழ்ப்பாணத்தில் நேற்று கொரோனாத் தடுப் பூசி ஏற்றும் பணிகள் இடம்பெற்றன. இதன் போது மூதாட்டி ஒருவருக்கு இரண்டு கைகளிலும் அடுத்த 19 ➤

## இலங்கையில் மீண்டும் கொரோனா தாண்டவம்:



# கடும் கட்டுப்பாடுகள் மீண்டும் வரக்கூடும்!

### இராணுவத் தளபதி எச்சரிக்கை

கொழும்பு, ஜூலை 30
இலங்கையில் நாளாந்தம் பதிவாகும் கொரோனா வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கை ஒரு மாதத் தின் பின்னர் மீண்டும் அதிகரித்துள்ளது. இதேநிலை நீடித் தால் இறுக்கமான கட்டுப்பாடுகளை நாம் விதிக்க வேண்டி வரும் இவ்வாறு தெரிவித்தார் சவேந்திர சில்வா. 19 ➤

## 36 நாள்களின் பின்னர் 2,000 கடந்தது தொற்றாளர்கள் எண்ணிக்கை!

கொழும்பு, ஜூலை 30
இலங்கையில் 36 நாள்களின் பின் னர் நாளாந்தக் கொரோ னாத் தொற்றாளர்களின் 19 ➤

## கொரோனாவால் முல்லைத்தீவில் ஒருவர் இறப்பு!

கொழும்பு, ஜூலை 30
முல்லைத்தீவு வண்ணாங்குளத் தைச் சேர்ந்த வயோதி பர் ஒருவர் கொரோனா 19 ➤

## கொரோனா பெருந்தொற்று இறப்புகள் மீண்டும் எகிறல்

### ஒரே நாளில் 66 பேர் உயிரிழப்பு

கொழும்பு, ஜூலை 30
இலங்கையில் நீண்ட நாள்களின் பின்னர் நாளாந்தக் கொரோனா சாவுக 19 ➤

## யாழ்ப்பாணத்தில் கொரோனாவால் மூவர் உயிரிழப்பு

கொழும்பு, ஜூலை 30
யாழ்ப்பாணத்தில் கொரோனாத் தொற் றால் மேலும் மூவர் நேற்று உயிரிழந் தனர். யாழ்ப்பாணம் போதனா மருத் துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த ஆனைக் 19 ➤

## ஒருதலைக் காதல் விவகாரம்
## சக பெண் பணியாளரை கத்தியால் குத்திய நபர்

### தானும் தற்கொலைக்கு முயற்சி

யாழ்ப்பாணம், ஜூலை 30
ஒருதலை காதல் விவகாரத்தால் சக பெண் பணியாளரைக் கத்தியால் குத்திய நபர், தன்னைத் 19 ➤

## வலிகாமம் வடக்கில் 12 ஏக்கர் காணி இராணுவ பிரிகேட்டுக்கு தாரைவார்ப்பு

### மாவட்ட காணி பயன்பாட்டுக்குழுவும் அனுமதி

யாழ்ப்பாணம், ஜூலை 30
வலிகாமம் வடக்கு பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட கொல்லன்கலட்டியில் சிமெந்துக் கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான 12 ஏக்கர் காணியை இராணுவத்துக்கு வழங்குவதற்கு யாழ்ப்பாண 19 ➤

## தோட்டக் கிணற்றில் சடலமொன்று மீட்பு!

யாழ்ப்பாணம், ஜூலை 30
சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்கு உட் பட்ட குட்டிப்புலம் பகுதியில் உள்ள தோட்டக் கிணற் றில் இருந்து உருக் 19 ➤

## அங்கஜனின் ஆள்களுக்கு ஒத்துழைப்பு வழங்குங்கள்

### மாவட்டச் செயலர் மகேசன் பிரதேச செயலர்களுக்கு கடிதம்

யாழ்ப்பாணம், ஜூலை 30
பிரதேச, கிராம மட்டத்தில் நடைமுறைப்படுத் தப்படும் திட்டங்கள் தொடர்பில் பொதுமக்க ளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கும், திட்டங்களை உரிய காலத்தில் முடிவுறுத்துவதற்கும் யாழ்ப் 17 ➤



# மக்களுடைய எதிர்ப்பை மீறி வட்டுவாகலில் காணி அளவீடு

### போக்குவரத்துத் தடை: அமைதியின்மை!

முல்லைத்தீவு, ஜூலை 30
முல்லைத்தீவு மாவட்டத்தில் மக்க ளுக்கு சொந்தமான 617 ஏக்கர் காணியை சுவீகரிப்பதற்கான அள வீடுகள் நேற்று மேற்கொள்ளப்பட் டுள்ளன. காணி அளவீடு இன்று இடம்பெறாது என்பதுபோன்ற தக வல் தெரிவிக்கப்பட்டு போராட்டக் காரர்களைத் திசைதிருப்பி இந்த அளவீடுகள் மேற்கொள்ளப்பட் டுள்ளன. வட்டுவாகல் கோத்தாபய கடற்படை 19 ➤

## அரசுக்கு எதிராக கிளர்ந்தெழுந்த மக்கள் அலையுடன் சங்கமிக்குக

### மைத்திரி அணிக்கு சு.க. ஆலோசகர் அறிவுரை

கொழும்பு, ஜூலை 30
'தொடர்ச்சியான நிராகரிப்புகளுக்கு மத்தி யில் அரசுக்குள் அங்கம் வகிப் பதால் மைத்திரிபால சிறிசேன 19 ➤

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 40,391 பேருக்கு நேற்று வடக்கில் தடுப்பூசி

யாழ்ப்பாணம், ஜூலை 30

**வடக்கு மாகாணத்தில் சினோபோர்ம் முதலாவது தடுப்பூசியை நேற்று 40 ஆயிரத்து 391 பேர் பெற்றுள்ளனர் என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.**



அதன்படி, 30 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு யாழ்ப்பாண மாவட்டத்தில் 18 ஆயிரத்து 039 பேருக்கும் கிளிநொச்சி மாவட்டத்தில் 5 ஆயிரத்து 110 பேருக்கும் முல்லைத்தீவு மாவட்டத்தில் 7ஆயிரத்து 865 பேருக்கும் வவுனியா மாவட்டத்தில் 9 ஆயிரத்து 377 பேருக்குமாக வடக்கு மாகாணத்தில் மொத்தமாக 40 ஆயிரத்து 391 பேருக்கு தடுப்பூசி வழங்கப்பட்டது என்று பணிப்பாளர் மேலும் தெரிவித்தார்.

தடுப்பூசி வழங்கும் பணி தொடரவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (த-26)

## நான்கு இடங்களில் இன்று வவுனியாவில் தடுப்பூசி

வவுனியா, ஜூலை 30

வவுனியாவில் இன்று தடுப்பூசி போடப்படும் நான்கு இடங்கள் தொடர்பில் சுகாதாரத் தரப்பினர் அறிவுறுத்தியுள்ளனர்.

அதன்படி, வவுனியா பண்டாரிக்குளம் கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த மக்களுக்கு விபுலானந்தாக் கல்லூரியில் காலை 8 மணி தொடக்கம் முற்பகல் 10 மணி வரையும் கூமாங்குளம் கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த மக்களுக்கு சித்தி விநாயகர் வித்தியாலயத்தில் இன்று காலை 8 மணி தொடக்கம் மாலை வரையும் தோணிக்கல் கிராம அலுவலர் பிரிவு மக்களுக்கு தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தில் காலை தொடக்கம் மாலை வரையும், ஆசிகுளம் கிராம அலுவலர் பிரிவு மக்களுக்கு சிதம்பரபுரம் பிரதேச மருத்துவ மனையிலும் கொவிட் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளன.

எனவே, 30 வயதுக்கு மேற்பட்டவர்கள் இன்று குறித்த பகுதிகளில் தடுப்பூசிகளை பெற்றுக் கொள்ளுமாறு சுகாதாரப் பிரிவினர் அறிவுறுத்தியுள்ளனர். (த-18)

## யாழ்ப்பாண மாவட்டத்துக்கு புதிய விதிமுறைகள் அறிவிப்பு

### மாவட்டச் செயலர் விடுத்தார்

யாழ்ப்பாணம், ஜூலை 30

யாழ்ப்பாண மாவட்ட வழிபாட்டுத் தலங்கள், திருமண நிகழ்வுகள் மற்றும் ஏனைய நிகழ்வுகளின்போது கடைப்பிடிக்கவேண்டிய விதிமுறைகள் தொடர்பில் யாழ்ப்பாண மாவட்டச் செயலர் சில அறிவுறுத்தல்களை விடுத்துள்ளார்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் தற்போதுள்ள கொரோனாத்தொற்று அபாய நிலையைக் கருத்திற்கொண்டு சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் சுற்றறிக்கைக்கு அமைவாக குறித்த விதிமுறைகள் அறிவிக்கப்படுகின்றன என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

அவை வருமாறு;

**வழிபாட்டிடங்கள்**

1) வழிபாட்டிடங்களில் போதியளவில் கை கழுவும் வசதி ஏற்பாடு செய்யப்பட்டு வருகைதரும் அனைவரும் கை கழுவுவது உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

2)அனைவரும் சரியான முறையில் முகக்கவசம் அணிந்திருத்தல் வேண்டும்.

3) தனியாள் இடைவெளி (தனி நபர்களுக்கிடையேயான இடைவெளி ஒரு மீற்றர் ) பேணுவதனை கண்டிப்பாக கடைப்பிடிக்க வேண்டும்.

4) கை கழுவுதல், முகக்கவசம் அணிதலை உறுதிப்படுத்த குறிப்பிட்ட ஒருவரை நியமிக்க வேண்டும்.

5) வழிபாட்டு நடவடிக்கைகளில் அதிகூடிய அளவில் ஒரே நேரத்தில் 100 பேர் மாத்திரமே ஒன்று கூடமுடியும். இந்த அதிகூடிய எண்ணிக்கையை பிரதேச அபாய நிலை, வழிபாட்டிடத்தின் அளவின் அடிப்படையில் தனியாள் இடைவெளியுடன் இருக்க கூடிய நபர்களின் எண்ணிக்கை என்பனவற்றின் அடிப்படையில் சுகாதார மருத்துவ அதிகாரி மேலும் குறைக்க முடியும்.

6) வெளி வீதியில் திருவிழாக்கள், பக்தர்கள் ஒன்றுகூடுதல், சுவாமி உலாவருதல், அன்னதான நிகழ்வுகள், தண்ணீர் பந்தல்கள் மற்றும் காவடி எடுத்தல் போன்ற நிகழ்வுகளை நடத்த முடியாது.

7) பக்தர்களுக்கு விபூதி பூசி விடுதல் மற்றும் பிரசாதம் வழங்குதல் என்பன முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளன.

8) வழிபாட்டுத்தல வளாகத்தினுள்ளோ வெளியிலோ தேவையற்ற விதத்தில் பொதுமக்கள் கூடிநிற்றல் ஆகாது.

9) வழிபாட்டுத் தலங்களுக்கு வருகை தருவோரின் பெயர் விவரங்கள் கட்டாயம் பேணப்பட வேண்டும்.

10) மேற்படி விதிமுறைகளைக் கடைப்பிடிப்பதனை வழிபாட்டுத் தலத்துக்கான நிர்வாகம், மதகுருமார்கள் உறுதிப்படுத்த வேண்டும்.

**ஏனைய நிகழ்வுகள்**

திருமணங்கள், பூப்புனித நீராட்டு விழா, பிறந்தநாள் விழாக்களை மண்டபங்களிலோ வீடுகளிலோ நடத்தும்போது பின்வரும் விடயங்களை கண்டிப்பாக கடைப்பிடிக்க வேண்டும்.

1) குறித்த நிகழ்வுகளுக்கான அனுமதியை தங்கள் பிரதேச சுகாதார மருத்துவ அதிகாரியிடம் முன்கூட்டியே பெற்றுக்கொள்ள வேண்டும்.

2) போதியளவில் கை கழுவும் வசதி ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.

3) வருகைதரும் அனைவரும் சரியான முறையில் முகக்கவசம் அணிந்திருத்தல் வேண்டும்.

4) தனியாள் இடைவெளி (தனி நபர்களுக்கிடையேயான இடைவெளி ஒரு மீற்றர் ) பேணுவதனை கண்டிப்பாக கடைப்பிடிக்க வேண்டும்.

5) கை கழுவுதல், முகக்கவசம் அணிதலை உறுதிப்படுத்த குறிப்பிட்ட ஒருவரை நியமிக்க வேண்டும்

6) நிகழ்வுகளில் பங்குபற்றக்கூடிய அதிகூடிய நபர்களின் எண்ணிக்கையை பிரதேச அபாய நிலை, மண்டபத்தின் அளவின் அடிப்படையில் தனியாள் இடைவெளியுடன் இருக்க கூடிய நபர்களின் எண்ணிக்கை என்பனவற்றின் அடிப்படையில் சுகாதார மருத்துவஅதிகாரி தீர்மானிப்பார்.

7) பங்குபற்றுவோரின் பெயர் விவரங்கள் சுகாதார மருத்துவ அதிகாரிகளுக்கு கட்டாயம் சமர்ப்பிக்கப்பட வேண்டும் - என்றுள்ளது. (த)

## கஞ்சா விற்பனை இருவர் கைது


யாழ்ப்பாணம், ஜூலை 30

யாழ்ப்பாணம் 8ஆம் குறுக்குத்தெரு அராலி வீதி பொம்மைவெளியில், கஞ்சா விற்பனையில் ஈடுபட்டனர் என்ற குற்றச் சாட்டில் இருவர் கைதுசெய்யப்பட்டனர். அவர்களிடமிருந்த 22 கஞ்சா போதைப் பொருள்கொண்ட சிறு பொதிகள் மீட்கப்பட்டன. அவற்றின் நிறை 25 கிராம் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாண மாவட்ட பொலிஸ் புலனாய்வுப் பிரிவினர் நேற்று ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தபோது, அவர்கள் சிக்கினர் என்று தெரிவிக்கப்பட்டது.

அதே இடத்தை சேர்ந்த ஒருவரும் கொக்குவில் பூநாறிமடம் பகுதியைச் சேர்ந்த ஒருவருமே கைது செய்யப்பட்டனர். விசாரணைகளின் பின்னர் அவர்கள் நீதிமன்றில் முற்படுத்தப்படுவர் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (த)

## பளையிலும் இன்று தடுப்பூசி



கிளிநொச்சி, ஜூலை 30

கிளிநொச்சி மாவட்டத்தின் பளை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுக்கு உட்பட்ட சில பகுதிகளைச் சேர்ந்த மக்களுக்கு பளை மத்திய கல்லூரியில் இன்றும் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது.

அதன்படி, புலோப்பளை, புலோப்பளை மேற்கு, அல்லிப்பளை, முல்லையடி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்கள் மேற்குறித்த பாடசாலையில் இன்று தடுப்பூசி பெறலாம்.

வேம்பொடுகேணி ஜி.ரி.எம்.எஸ். பாடசாலையில் நாளை சனிக்கிழமை இத்தாவில், அரசர்கேணி, கச்சார்வெளி, வேம்பொடுகேணி, முகமாலை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்கள் தடுப்பூசி பெறலாம்.

எதிர்வரும் திங்கட்கிழமை கிளாலி ஜி.ரி.எம்.எஸ். பாடசாலையில், கிளாலி மக்களுக்கு தடுப்பூசி வழங்கப்படும்.

எதிர்வரும் 3ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இயக்கச்சி ஜி.ரி.எம்.எஸ். பாடசாலையில் இயக்கச்சி, கோவில்வயல், முகாவில் ஆகிய பகுதி மக்கள் தடுப்பூசி பெறலாம்.

மறுநாள் 4ஆம் திகதி சோரன்பற்று கணேசா பாடசாலையில், சோரன்பற்று, மாசார் மற்றும் தர்மக்கேணி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்களுக்குத் தடுப்பூசி வழங்கப்படும்.

முன்னர் தடுப்பூசி பெறத் தவறியவர்களும் குறித்த பகுதிகளில் தடுப்பூசி பெற்றுக்கொள்ளலாம் என்றும் சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையினர் தெரிவித்தனர். (த-6)

## இத்தாவில், முகமாலையில் சில பகுதிகளுக்கு விடுதலை

### காணிகளை பதிவுசெய்வதற்கு ஆவணங்களுடன் வருமாறு அழைப்பு

கிளிநொச்சி, ஜூலை 30

கிளிநொச்சி மாவட்டத்தின் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவில் ஏ/9 வீதியின் வடக்கே இத்தாவில், முகமாலை பிரிவின் லக்ஸபான உயர் அழுத்த மின்கம்பம் அமைந்த பகுதிக்கு உட்பட்ட இடங்கள் விடுவிக்கப்படவுள்ளன. எனவே, குறித்த பகுதிகளில் மீள்குடியமர விரும்பும் மக்கள் மற்றும் காணி உரிமையாளர்கள் எதிர்வரும் 10ஆம் திகதிக்கு முன்னர் பிரதேச செயலக திட்டமிடல் கிளையில் பதிவுகளை மேற்கொள்ளுமாறு பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் கோரியுள்ளார்.

பதிவுகளின்போது முழுப்பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம், அங்கத்தவர் எண்ணிக்கை, தற்போது வசிக்கும் கிராம அலுவலர் பிரிவு, காணி உரிமப்பத்திரம் என்பனவற்றுடன் வருமாறும் பிரதேச செயலர் கோரியுள்ளார். (த-6)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



### செல்வச்சந்நிதியான் திருவிழாவில் இந்தமுறை

# வெளியூர் பக்தர்களுக்குத் தடை நேர்த்திக் கடன் எதுவுமே இராது

யாழ்ப்பாணம், ஜூலை 30

வரலாற்றுச் சிறப்புமிக்க தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி கோவில் வருடாந்த பெருந்திருவிழா எதிர்வரும் 8ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ள நிலையில், வெளியூர் பக்தர்கள் பங்கேற்பதற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

பெருந்திருவிழா தொடர்பில், வடமராட்சி வடக்கு பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளர் ஆழ்வாப்பிள்ளை சிறி தலைமையில் வல்வெட்டித்துறை நகர சபைத் தலைவர், பருத்தித்துறை சுகாதார மருத்துவ அதிகாரி, பொலிஸார் உள்ளிட்டோரின் பங்களிப்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டத்தில் சில தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன.

அவை தொடர்பில் பிரதேச செயலர் குறிப்பிட்டுள்ளதாவது:

இந்த ஆண்டு திருவிழாவை பெருமெடுப்பில் நடத்துவதற்கு அனுமதியில்லை. கோவில் உள்வீதியில் மட்டுமே வழிபாடுகள் மற்றும் சமய நிகழ்வுகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதுடன் வெளிப்புறச் சூழலில் சமய நிகழ்வுகள், கலை நிகழ்வுகள் மற்றும் நேர்த்திக்கடன் நிறைவேற்றுதல் என்பவற்றுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு தனியார், அரச பேருந்துகள் சேவையில் ஈடுபட அனுமதியில்லை. வெளியூர் பக்தர்கள் பங்கேற்பதற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

கோவில் சுற்றாடலில் வீதிகளில் மண்டகப்படி வைத்தல், பிரசாதம் வைத்தல், தாகசாந்தி மற்றும் அன்னதானம் வழங்கல் என்பன முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளன. அங்கப்பிரதட்சணம் செய்தல், அடி அழித்தல், கற்பூரச் சட்டி எடுத்தல், காவடி, தூக்குக் காவடி எடுத்தல், போன்ற நேர்த்திக் கடன்களின்போது கொரோனா தொடர்பான சுகாதார நடைமுறைகளை முறையாகக் கடைப்பிடிக்காத நிலை காணப்படுகின்றமையால், மேற்படி நேர்த்திக் கடன்களை கோவில் வளாகத்திலும் அதனைச் சூழவுள்ள பகுதிகளிலும் மேற்கொள்ளுதல் முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது.

கோவில் சுற்றாடல் மற்றும் கோவிலை அண்மித்த பகுதியில் அடியவர்கள் மற்றும் பொதுமக்கள் கூடுவதற்கான தெய்வீக சொற்பொழிவுகள், தெய்வீக இசை அரங்குகள், கலை நிகழ்வுகள் மற்றும் பொழுதுபோக்குக்கான அனைத்து நிகழ்வுகளும் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன.

ஏற்கனவே கோவில் சூழலில் இயங்கிவந்த கடைகள் மாத்திரமே தொடர்ந்தும் இயங்க அனுமதிக்கப்படும். எனினும், இயங்கிவரும் கடைகளை விரிவாக்க அனுமதியில்லை. சூழலிலுள்ள வெற்றுக் காணிகளிலோ அல்லது கட்டடங்களிலோ கடைகள் அமைப்பதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது. நடமாடும் வியாபாரமும் அனுமதிக்கப்படாது.

இந்த ஆண்டு நீர்ப்பாசனத் திணைக்கள பாலத்துடனான போக்குவரத்து இடம்பெறாது.

வழிபாடுகளின்போது கோவில் சுற்றாடலில் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றத் தவறும் பட்சத்தில் அல்லது மீறுபவர்கள் மீது சுகாதார விதிமுறைகளின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும். அடியவர்கள் நீண்ட நேரம் கோவிலில் தரித்து நிற்பதற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள்.


போக்குவரத்துப் பாதைகள் தடைப்படுத்தப்படும்போது பிரயாணிகள் மாற்றுவழிப் பாதையைப் பயன்படுத்த வேண்டிவரும்.

தற்போதைய சூழ்நிலையில் வழங்கப்பட்டுள்ள சுகாதார நடைமுறைகளை கடைப்பிடிக்காமை, மீறியமை போன்றவற்றால் ஏற்படும் அசௌகரியங்களை கருத்திற்கொண்டு அனைவரும் முழுமையான ஒத்துழைப்பை வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றோம் - என்றார். (த-26)

### கைதடி சித்தமருத்துவ பிரிவில்

# கற்றலை மீளஆரம்பிக்கவந்த மாணவர்கள் இருவருக்குத் தொற்று

சாவகச்சேரி, ஜூலை 30



**கைதடி சித்தமருத்துவ பிரிவில், பல்கலைக்கழக கற்றலை மீள ஆரம்பிக்கவென மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து நேற்று அழைக்கப்பட்ட 47 மாணவர்களில் இருவருக்குக் கொரோனாத்தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.**

அவர்களுக்கு நேற்று மேற்கொள்ளப்பட்ட அன்டிஜென் பரிசோதனையிலேயே மட்டக்களப்பின் காத்தான்குடியைச் சேர்ந்த, இருவருக்குத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

அதனையடுத்து சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தினர் அந்த இருவரையும் கொரோனா இடைநிலை சிகிச்சை நிலையத்துக்கு அனுப்பிவைத்தனர்.

கைதடி சித்தமருத்துவபீடத்தில் கற்கும் மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த மாணவர்களை, கற்றல் நடவடிக்கைகளை ஆரம்பிக்கும் நோக்கில் பல்கலைக்கழக நிர்வாகத்தினரே அழைத்திருந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

மாணவர் அணியினர் இங்கு வந்துள்ளனர் என்பதை அறிந்த சாவகச்சேரி சுகாதாரப் பிரிவினர், அந்த மாணவர்கள் அனைவருக்கும் அன்டிஜென் பரிசோதனை மேற்கொண்டனர். அதன்போதே இருவருக்குத் தொற்று உள்ளமை தெரியவந்துள்ளது.


காத்தான்குடி ஏற்கனவே தொற்று அபாய பிரதேசமாக இருந்தது. இந்தநிலையில், அங்குள்ள மாணவர்களை வரவழைத்தமை குறித்து சுகாதாரப் பகுதியினர் கவலை தெரிவித்தனர்.

இதேவேளை, மாணவர்களின் வருகையையடுத்து சித்த மருத்துவ பீடத்தில் பணிபுரியும் அனைத்து பணியாளர்களும் கடந்த திங்கட்கிழமை தொடக்கம் நிர்வாகத்தினரால் கடமைக்கு அழைக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(த-9)

# கரவெட்டியில் தடுப்பூசிபெற நீண்டநேரமாகக் காத்திருப்பு

### பொதுமக்களின் குற்றச்சாட்டை மறுக்கிறார் சுகாதார மருத்துவ அதிகாரி



யாழ்ப்பாணம், ஜூலை 30

கரவெட்டி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில், கொரோனா தடுப்பூசியைப் பெற்றுக்கொள்வதில் பெரும் இடையூறுகளை எதிர்கொண்டுள்ளோம் என்று பொதுமக்கள் குற்றம் சாட்டினர்.

குறித்த சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில், 35 கிராம அலுவலர் பிரிவுகள் காணப்படுகின்றன. அங்குள்ள 30 வயதுக்கு மேற்பட்ட 18 ஆயிரத்து 474 பேருக்கு தடுப்பூசி ஏற்றும் பணி நேற்றுக்காலை ஆரம்பிக்கப்பட்டது.

இந்தநிலையில், குறித்த 35 கிராம அலுவலர் பிரிவுகளையும் சேர்ந்த 30 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு ஒரே இடத்தில் வைத்து தடுப்பூசி ஏற்றப்படுவதால் இங்கு ஏராளமானோர் குவிந்தனர். அதனால் தடுப்பூசியைப் பெற நீண்டநேரம் காத்திருக்கவேண்டியநிலை ஏற்பட்டது என்று அங்குநின்ற மக்கள் தெரிவித்தனர்.

குறித்த பிரிவில், கோவில்களிலும், ஏனைய இடங்களில் நடக்கும் நிகழ்வுகளிலும் தனியாள் இடைவெளி பேணப்படவில்லை என்றும் அதனால் தொற்று தீவிரமடைந்தது என்றும் மாகாண சுகாதாரப் பணிப்பாளரே கூறியிருந்த நிலையில், நேற்று தடுப்பூசி ஏற்றும் பகுதியில் பெரும் எண்ணிக்கையானோர் கூடியிருந்தனர் இது தொற்றுப் பரவ வாய்ப்பளிக்காதா என்றும் கேள்வியெழுப்பிய அவர்கள், தாம் நீண்டநேரமாகக் காத்திருக்கவேண்டிய நிலை ஏற்பட்டது என்றும் தெரிவித்தனர்.

இந்தக் குற்றச்சாட்டுகள் தொடர்பில் கரவெட்டி சுகாதார மருத்துவ அதிகாரியைத் தொடர்புகொண்டு கேட்டபோது, தனியாள் இடைவெளியுடனேயே மக்களுக்கு தடுப்பூசி ஏற்றப்படுகின்றது என்றுகூறி குற்றச்சாட்டை மறுத்தார். (த-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடையாளம் காணப்பட்டது சடலம்

தலைமன்னார், ஜூலை 30

தலைமன்னார் தீடையில் மீட்கப்பட்ட சடலம் 13 தினங்களின் பின்னர் அடையாளம் காணப்பட்டுள்ளது.

கற்பிட்டியைச் சேர்ந்த நபருடைய சடலமே அது என்று சடலமாக மீட்கப்பட்டவரின் மகன் நேற்று அடையாளம் காட்டியுள்ளார். அதனையடுத்து, அதை உறுதிப்படுத்துவதற்காக, மரபணு பரிசோதனை மேற் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று தலைமன்னார் பொலிஸார் தெரிவித்தனர்.

தலைமன்னார் பாக்குநீர் பகுதி கடற்பரப்புக்குள் அமைந்துள்ள ஐந்தாவது தீடையில் கடந்த 16ஆம் திகதி குறித்த ஆணின் சடலம் கடற்படையினரால் மீட்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-60)

# அக்கராயனில் சடலம் மீட்பு

கிளிநொச்சி, ஜூலை 30


கிளிநொச்சி அக்கராயன் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மணியங்குளம் ஸ்கந்தபுரம் பகுதியில், குடும்பத்தலைவர் ஒருவர், தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டார். அதே பகுதியைச் சேர்ந்த செல்லமுத்து குமார் (வயது 56) என்பவரே சடலமாக நேற்று மீட்கப்பட்டார்.

அக்கராயன் பொலிஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர். (த-113)

# ஜனாதிபதி ஊடக மையம் திறப்பு

**கொழும்பு, ஜூலை 30**

**புதிதாக நிர்மாணிக் கப்பட்டுள்ள ஜனாதிபதி ஊடக மையம், ஜனாதிபதியின் தலைமை ஆலோசகர் லலித் வீரதுங்க தலைமையில், நேற்று முற்பகல் திறந்து வைக்கப்பட்டது.**



கொழும்பு - கோட்டை ஜனாதிபதி மாளிகைக்கு முன்னால் அமைந்துள்ள பழைய சாரட் வங்கிக் கட்டடத்தின் கீழ் மாடியில், இந்த ஊடக மையம் அமையப்பெற்றுள்ளது.

'சுபீட்சத்தின் நோக்கு' கொள்கைப் பிரகடனத்தின் ஊடாக மக்களுக்கு வழங்கப்பட்ட உறுதிமொழிகளை நனவாக்கும் நோக்கத்தில் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்களின் முன்னேற்றங்கள் மற்றும் ஜனாதிபதியினதும் ஜனாதிபதி அலுவலகத்தினதும் தகவல்களை, சரியாகவும் வினைத்திறனாகவும் ஊடகங்கள் மற்றும் பொதுமக்களுக்கு வழங்குவதே, இந்த ஜனாதிபதி ஊடக மையத்தின் எதிர்ப்பார்ப்பாகும் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வாராந்தம் நடத்தப்படும் ஊடகச் சந்திப்புகளின்போது, தெரிவுசெய்யப்பட்ட தலைப்பின் கீழ், ஜனாதிபதியின் பேச்சாளரிடமோ அல்லது அரச அதிகாரிகளிடமோ நேரடியாகவோ, இணையவழி ஊடாகவோ கேள்விகளை எழுப்புவதற்கு, ஊடகவியலாளர்களுக்கு சந்தர்ப்பம் அளிக்கப்படவுள்ளது.

40 ஊடகவியலாளர்கள் ஒரே தடவையில் அமரும் வகையிலும் அவர்களது தேவைகளைப் பூர்த்திசெய்யும் வகையிலான அனைத்து அம்சங்களுடனும், இந்த ஊடக மையம் அமையப்பெற்றுள்ளது.

ஊடக மையத்தை திறந்து வைத்து கருத்துரைத்த ஜனாதிபதியின் ஆலோசகர் லலித் வீரதுங்க, பிரபலமான ஊடகப் பயன்பாட்டுக்கு அப்பால் சென்ற ஒரு முழுமையான ஊடக கலாசாரமொன்றைக் கட்டியெழுப்புவதற்கு, இந்த ஜனாதிபதி ஊடக மையம் உறுதுணையாக இருக்குமென்று தான் நம்புகிறேன் எனத் தெரிவித்தார்.

கொவிட் தொற்றொழிப்புக்கான தடுப்பூசி ஏற்றல் வேலைத்திட்டம், அதன் முன்னேற்றம் மற்றும் எதிர்காலத் திட்டங்கள் தொடர்பில், இன்றைய தினத்தில் ஊடகவியலாளர்களுக்குத் தெளிவுபடுத்தப்பட்டது. இதன்போது ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்வி களுக்கு பதிலளித்த லலித் வீரதுங்க, செப்ரெம்பர் 15ஆம் திகதிக்குள், 30 வயதுக்கு மேற்பட்ட சகலருக்கும் தடுப்பூசி ஏற்றும் பணிகள் நிறைவடையும் என்றார்.

அதேபோன்று, 18 - 30 வயதுக்கு இடைப்பட்டோருக்கான தடுப்பூசி ஏற்றும் பணிகளுக்குரிய திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன என்றும் உலக சுகாதார ஸ்தாபனத்தின் பரிந்துரைகள் கிடைத்தவுடன், அப்பணிகள் முன்னெடுக்கப்படும் என்றும், லலித் வீரதுங்க குறிப்பிட்டார். சமீபத்திய அறிக்கையின்படி, உலகின் செல்வந்த நாடுகளிடையே 90 சதவீதத்துக்கும் அதிகளவான தடுப்பூசிகள் பகிரப்பட்டுள்ளன என்றும் எஞ்சிய 5 சதவீதத்துக்கும் குறைவானவையே, அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளிடையே பகிரப்பட்டுள்ளன என்றும், இருந்தபோதிலும், தடுப்பூசி ஏற்றலில் இலங்கையின் முன்னேற்றமானது, ஒரு பெரிய சாதனையென்றும், லலித் வீரதுங்க தெரிவித்தார். அத்துடன், தற்போதைய நிலைமையில், தடுப்பூசி ஏற்றல் நடவடிக்கையில், இலங்கை முதலிடத்தில் உள்ளதென்றும் அவர் குறிப்பிட்டார். இதன்போது கருத்துரைத்த ஜனாதிபதி ஊடகப் பிரிவின் பணிப்பாளர் நாயகம் சுதேவ ஹெட்டிஆரச்சி, உண்மைத் தகவல்களைப் பரிமாற்றிக்கொள்ளும் கேந்திர நிலையமாக இந்த ஜனாதிபதி ஊடக மையத்தை மாற்றிக் கொள்வது, ஊடகவியலாளர்களாகிய எம் அனைவரதும் பொறுப்பாகும் - என்றார்.

இதேவேளை, மக்களுக்குச் சரியான தகவல்கள் போய்ச் சேரவேண்டும் என்று, ஜனாதிபதியின் சுபீட்சத்தின் நோக்கு கொள்கைப் பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள உறுதிமொழியை நிறைவேற்றுவதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் ஒன்றாகவே, இந்த ஜனாதிபதி ஊடக மையம் காணப்படுகிறது என, ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளர் கிங்ஸ்லி ரத்நாயக்க தெரிவித்தார், என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ஊடக மையத்தில் சிங்கள மொழிக்கு முதலிடமும் ஆங்கிலத்துக்கு இரண்டாம் இடமும் தமிழ் மொழிக்கும் மூன்றாமிடமும் வழங்கப்பட்டிருந்தது. இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டதையடுத்து தமிழ் மொழிக்கு இரண்டாம் இடம் வழங்கப்பட்

## இரு நாள்களான சிசு கொரோனாவால் சாவு

கொழும்பு,ஜூலை 30

பிறந்து இரண்டு நாள்களேயான சிசுவொன்று, கொரோனா தொற்றால் உயிரிழந்துள்ளது. களுத்துறை பொது மருத்துவமனையில் பிறந்த சிசு, நேற்று முன்தினம் உயிரிழந்தது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெலிபென்ன திப்பிட்ட பகுதியைச் சேர்ந்த பெண் இந்த சிசுவைப் பிரசவித்துள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ.4)

## உப கொத்தணிகள் உருவெடுக்கலாம்

*அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை*

கொழும்பு,ஜூலை 30

நாட்டில் சில நிகழ்வுகள் மற்றும் உற்சவங்களைக் கொண்டாடுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதால், கொரோனாத் தொற்றின் உப கொத்தணிகள் உருவாகுவதற்கு வாய்ப்புகள் உள்ளன என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் ஊடகக்குழு மற்றும் மத்திய குழு உறுப்பினர் மருத்துவர் வாசன் ரட்ணசிங்கம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போது மருத்துவமனை ஊழியர்களும் கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகும் வீதம் அதிகரித்துள்ளது. இவர்களில் அதிகளவானோர் இரு கட்டங்களாக தடுப்பூசியைப் பெற்றுள்ளனர்.

எனவே தடுப்பூசியைப் பெற்றுக் கொள்வது மாத்திரமின்றி அடிப்படை சுகாதார விதிமுறைகளையும் சகலரும் பின்பற்றினால் மாத்திரமே கொரோனா அச்சுறுத்தலிலிருந்து மீள முடியும்.

தற்போது டெல்டா வைரஸ் பரவல் காரணமாக ஆபத்து அதிகரித்துள்ளதாகவே கருதப்படுகின்றது- என்றார். (ஓ.4)

## கெட்டகொடவுக்கு பெரும் ஏமாற்றம்

கொழும்பு,ஜூலை 30

நிதியமைச்சர் பஸில் ராஜபக்ச நாடாளுமன்றுக்குள் நுழைவதற்கான, தனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை தியாகம் செய்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜயந்த கெட்டகொடவுக்கு வழங்கப்பட்ட புதிய பதவி பறிபோயுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

அவருக்கு இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபன பணிப்பாளர் பதவி அளிக்கப்பட்டபோதிலும், அந்தப் பதவியில் ஏற்னவே உள்ள ஜகத் வெள்ளவத்தை தொடர்ந்தும் பதவியில் உள்ளார்.

திறைசேரியின் செயலாளரால் ஜயந்த கெட்டகொடவுக்கு புதிய பதவி அளிப்பதற்கான கடிதமும் கடந்த 7ஆம் திகதி அனுப்பப்பட்டது. இருந்தபோதிலும் அந்தக் கடிதத்தை இதுவரை ஏற்றுக்கொள்ளாத ஜகத் வெள்ளவத்த, பதவியை இன்னும் இராஜினாமா செய்யாமலிருப்பது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. (ஓ.4)

## ஹிஜாஸ் ஹிஸ்புல்லாவுக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் மாற்றியமைப்பு

கொழும்பு,ஜூலை 30

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு, சுமார் 15 மாதங்களாக தடுப்பிலுள்ள சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லாவுக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் பல தடவைகள் மாற்றியமைக்கப்பட்டுள்ளன என்று 11 சர்வதேச மனித உரிமை அமைப்புக்கள் இணைந்து கூட்டாக சுட்டிக்காட்டியுள்ளன.

ஹிஸ்புல்லாவுக்கு எதிராக நம்பத் தகுந்த ஆதாரங்கள் எவையும் தற்போது வரை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை. கடந்த காலத்தில் முன்னெடுக்கப்பட்ட கருத்துச் சுதந்திரம் மற்றும் மனித உரிமைகள் சார் செயற்பாடுகளுக்காகவே அவர் இலக்கு வைக்கப்பட்டுள்ளார் என்று கருத வேண்டியுள்ளது.

பயங்கரவாத் தடைச்சட்டத்தை மீளாய்வு செய்வோம் என்று வழங்கிய வாக்குறுதிக்குப் புறம்பாக, தன்னிச்சையாகத் தடுத்துவைப்பதற்கு வாய்ப்பளிக்கும் சட்டத்தை இலங்கை தொடர்ந்தும் பயன்படுத்தி வருகின்றது. இந்தச்சட்டத்தையும் அதன் பயன்பாட்டையும் இலங்கை அரசு உடனடியாக மீளாய்வுக்கு உட்படுத்த வேண்டும் என்றும் அந்த அமைப்புக்கள் வலியுறுத்தியுள்ளன.

சர்வதேச மன்னிப்புச் சபை, ஆர்டிகல் 19, மனித உரிமைகள் மற்றும் அபிவிருத்திக்கான ஆசியப்பேரவை, பிரஜைகளின் பங்களிப்புக்கான உலகளாவிய கூட்டணி, முன்னிலை பாதுகாவலர்கள், மனித உரிமைகள் கண்காணிப்பகம், சர்வதேச சட்டத்தரணிகள் சங்கத்தின் மனித உரிமைகள் செயற்றிட்டம், சர்வதேச யூரர்கள் ஆணைக்குழு, அனைத்து விதங்களிலுமான அடக்குமுறைகள் மற்றும் இனவாதத்துக்கு எதிரான சர்வதேச முன்முயற்சி, இலங்கையிலுள்ள சர்வதேச செயற்பாட்டாளர்கள் மற்றும் உண்மைக்கும் நீதிக்குமான இலங்கையின் செயற்றிட்டம் ஆகிய 11 அமைப்புக்கள் இணைந்து இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளன. (ஓ.4)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# போராட்ட அலையால் நாட்டுக்கு பேராபத்தாம்

## நீலிக்கண்ணீர் வடிக்கிறது ஆளுங்கட்சி

**கொழும்பு, ஜூலை 30**

**நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள தொழிற்சங்கங்களின் போராட்ட அலையால் கொரோனா வைரஸ் தொற்று வேகமாக பரவி, இந்தியாவின் நிலைமை இங்கு ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது. எனவே, நாட்டின் எதிர்காலம் குறித்தும் சிந்தித்து தொழிற்சங்கங்கள் செயற்பட வேண்டும் என்று ஆளுங்கூட்டணியின் தலைமைக்கட்சியான சிறிலங்கா பொதுஜன பெரமுன தெரிவித்துள்ளது.**

பொதுஜன பெரமுனவின் ஊடகவியலாளர் மாநாடு நேற்று நடைபெற்றது. இதன்போது கருத்து வெளியிடுகையிலேயே அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜகத் குமார இவ்வாறு கூறினார். இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

நாட்டில் தற்போது பெரியதொரு போராட்ட அலை உருவாகியுள்ளது. கடந்த ஆட்சியின்போது இவ்வாறானதொரு நிலைமை ஏற்பட்டிருக்கவில்லை. தாதியர்களின் பணிப்புறக்கணிப்பு போராட்டத்துக்கு சமன் ரத்னபிரிய என்பவரே தலைமை வகிக்கின்றார். அவர் ஐக்கிய தேசியக்கட்சியின் உறுப்பினராக நல்லாட்சியில் பதவி வகித்தவர். தமது தொழிற்சங்க உறுப்பினர்களுக்கு தீர்வைப் பெற்றுக்கொடுக்க வேண்டும் என்ற எண்ணம் இருந்திருந்தால் நல்லாட்சியின்போது அதனை செய்திருக்கலாம். ஏனெனில் போரோ அல்லது தொற்றுநோய் நெருக்கடியோ அப்போது இருக்கவில்லை. இன்று நாட்டில் எல்லா வழிகளிலும் நெருக்கடியான நிலையே நிலவுகின்றது. இவ்வாறானதொரு சூழ்நிலையில்தான் தீர்வு கோரி போராடுகின்றனர். உலகில் பலம்பொருந்திய நாடுகள் கூட வீழ்ச்சியை எதிர்கொண்டுள்ளன. உறுதிமொழிகளை நிறைவேற்ற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, கழுத்தில் கத்தியை வைத்து மிரட்டுவதுபோல, தொழிற்சங்கங்கள் செயற்படுவது ஏற்புடைய விடயமல்ல.

தொழிற்சங்க போராட்டங்கள் முன்னெடுக்கப்படவேண்டும்தான். அதற்கான உரிமை இருக்கின்றது. எனினும், மக்கள் மற்றும் மாணவர்களை பலிகடாவாக்கிவிட்டு அதனை செய்வதற்கு முற்படக்கூடாது.

ஜோசப் ஸ்டாலினும் கடந்த ஆட்சியுடன் நெருக்கமாக இருந்தவர். 26 வருடங்களாக இருந்த ஆசிரியர்களின் பிரச்சினைகளுக்கு அப்போது தீர்வைப் பெற்றுக் கொடுப்பதற்கு முயற்சிக்கலாம். இன்று போராடுவதுபோல ஏன் அன்று போராடவில்லை? இன்று எச்சரிக்கையான கட்டத்திலேயே நாம் உள்ளோம் என சுகாதாரத் தரப்பினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர். உரிமைகளை வென்றெடுப்பதற்கு எமக்கு நாடொன்று இருக்கவேண்டும். எதிர்காலம் இருக்க வேண்டும். எனவே, சிந்தித்து செயற்படுமாறு தொழிற்சங்கங்களிடம் கேட்டுக்கொள்கின்றோம்.

ஆகவே, தொழிற்சங்கங்களும் மக்கள், மாணவர்கள், நாடு குறித்து சிந்திக்க வேண்டும்.

தொழிற்சங்க போராட்டங்களின் பின்னணியில் அரசியல் சக்தியின் கரம் இருக்கக்கூடும். சஜித், ரணில் போன்றவர்களும் உடன் தீர்வுகளை வழங்குமாறு வலியுறுத்துகின்றனர். அவர்களின் ஆட்சியின்போது ஏன் தீர்வு வழங்கப்படவில்லை. எனவே, குட்டையைக் குழப்பி மீன்பிடிப்பதற்கு எதிரணியினர் முயற்சிக்கின்றனர் - என்றார். (ஒ.44)



# சுதந்திரக் கட்சியை விரட்டும் பெரமுன

கொழும்பு, ஜூலை 30

ராஜபக்ச அரசு சலூன் கதவு போன்றது. எனவே, எந்நேரத்தில் வேண்டுமானாலும் சிறிலங்கா சுதந்திரக்கட்சி வெளியேறலாம். அதில் எமக்கு எவ்வித பாதிப்பும் கிடையாது என்று சிறிலங்கா பொதுஜன பெரமுன உறுப்பினர் இராஜாங்க அமைச்சர் சனத் நிசாந்த தெரிவித்தார்.

சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார். இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

எமது அரசு கூட்டணி அரசாகும். அதில் அங்கம் வகிக்கும் சிறு கட்சிகள் வெவ்வேறான கருத்துகளை வெளிப்படுத்த முடியும். எனினும், சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் கருத்தே ஏற்புடையதாக அமையும். இதனால் சிலவேளை சிறு கட்சிகள் எம்மைவிட்டு விலகி செல்லவும்கூடும்.

குறிப்பாக அரசிலிருந்து வெளியேறப்போவதாக சுதந்திரக்கட்சி யிலுள்ள தரப்பொன்று குறிப்பிடுகின்றது. வெளியேற வேண்டுமானால் அமைச்சு பதவிகளை வகித்துக்கொண்டு, சுகபோகம் அனுபவிக்காமல் வெளியேற வேண்டும். ராஜபக்ச அரசின் சலூன் கதவு திறந்தே உள்ளது. உள்ளே வரலாம். வெளியேறலாம்.

சிறு கட்சிகளுடன் இணைந்து பயணிக்க நாம் விரும்புகின்றோம். அவர்கள் வெளியேறினால்கூட எமக்கு அது சவாலாக அமையாது, என்றார். (ஒ.44)

மன்னாரில்

# இதய நோயால் இறந்தவருக்கு கொரோனாத் தொற்று உறுதி

## பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவிப்பு

மன்னார்,ஜூலை 30

மன்னாரில் இதய நோயால் இறந்த ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது என்று மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ரி.வினோதன் தெரிவித்தார்.

மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் நேற்றுக் காலை நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

மன்னார் மாவட்டத்தில் நேற்றைய தினம் (நேற்றுமுன்தினம்) ஐந்து கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டனர். அவர்களில் இதய நோயால் உயிரிழந்த ஒருவருக்கும் கொரோனாத் தொற்று இருப்பது உறுதிசெய்யப்பட்டது. இறந்தவர் மன்னர் கட்டையடம்பன் பகுதியைச் சேர்ந்த 37 வயதுடைய ஆண் ஒருவர் ஆவார்.

மேலும் மன்னார் மாவட்டத்தில் நேற்று (நேற்று முன்தினம்) வரை 52 ஆயிரத்து 682 பேருக்கு முதலாவது கொரோனாத் தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளது. அத்துடன் 550 பேருக்கு இரண்டாவது தடுப்பூசியும் ஏற்றப்பட்டுள்ளது. தற்போது ஆலயத் திருவிழாக்கள் மட்டுப்படுத்தப்பட்ட அளவு பக்தர்களோடு நடைபெற அனுமதிக்கப்பட்டு இருப்பதால் மக்கள் தேவையில்லாமல் கூடி நிற்பதை தவிர்த்து சுகாதார நடைமுறைகளை இறுக்கமாக கடைப்பிடிக்கவும்- என்றார். (ஐ-213)

# கால்வாயில் தவறி வீழ்ந்து ஒருவர் உயிரிழப்பு

கிளிநொச்சி,ஜூலை 30

கால்வாயில் தவறி வீழ்ந்த நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் கிளிநொச்சி தர்மபுரம் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

அதே இடத்தைச் சேர்ந்த 43 வயதுடைய நபரே இவ்வாறு உயிரிழந்தார். இவரது உடல் கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையில் பிரேத பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-316)

# உறவினர்களை கொழும்பிலிருந்து அழைத்துவர அமைச்சு வாகனத்தைப் பயன்படுத்திய செயலர்

## வடக்கு மாகாணத்தில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஜூலை 30

வடக்கு மாகாண அமைச்சு ஒன்றின் செயலர் ஒருவர், அலுவலக வாகனத்தை 'சேர்விஸ்க்கு' அனுப்புதல் என்ற பெயரில் உறவினர்களை அழைத்துவருவதற்குப் பயன்படுத்திய சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது. அமைச்சுச் செயலரின் உறவினர்கள் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வர முடியாமல் தவித்துள்ளனர். இதனையடுத்து அமைச்சுச் செயலர் அலுவலக வாகனத்தை சேர்விஸுக்கு அனுப்பும் நோக்கில் அவர்களை ஏற்றிவருவதற்குப் பயன்படுத்தியுள்ளார்.

மேற்படி அமைச்சின் வாகனங்களுக்குரிய 'மெக்கானிக்கல் சேர்விஸ்' வழமையாக இரத்மலானையில் உள்ள ஓர் இடத்திலேயே மேற்கொள்ளப்படுவது வழமை. ஆனால் இம்முறை வத்தளையில் வேறு ஓர் நிறுவனத்தில் மெக்கானிக்கல் சேர்விஸ் போடப்பட்டுள்ளது. அமைச்சின் வாகனம் கடந்த 27ஆம் திகதி யாழ்ப்பாணத்திலிருந்து புறப்பட்டு 28ஆம் திகதி மதியம் யாழ்ப்பாணத்தை வந்தடைந்துள்ளது.

இதே அமைச்சின் வாகனம் ஒன்று மெக்கானிக்கல் சேர்விஸ் போடப்பட்டு இரத்மலானையில் உள்ளது. அந்த வாகனத்தை எடுத்து வருவதற்கு அமைச்சின் சாரதிகள் செல்வதற்கு தனியான வாகனம் அனுப்ப முடியாது என்று கூறிய அமைச்சின் செயலரே, தனது உறவினர்களை அழைத்துவருவதற்கு வேறொரு வாகனத்தை சேர்விஸ் என்று கூறி கொழும்புக்கு அனுப்பி வைத்துள்ளார். (ஒ.7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசு பெறும் கடன்களுக்கு இலங்கையர்களே பொறுப்பு

## ஐ.தே.க. எச்சரிக்கை



**கொழும்பு,ஜூலை 30**
**உலக நாடுகளிடம் முறையற்ற வகையில் அரசால் பெற்றுக்கொள்ளப்படும் கடன்களை, இறுதியில் இலங்கையர்களே மீளச்செலுத்த வேண்டும். எனவே அரசுக்கு எதிராக அனைத்து தரப்பினரும் ஒன்றிணைந்து போராடவேண்டும்.**

இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் ருவான் விஜயவர்தன தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
நாடு பொருளாதார மட்டத்தில் பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளது.
பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் சிறந்த திட்டம் அரசிடம் கிடையாது. உலகம் முழுவதும் கடன் பெற்று அரச நிர்வாகத்தை முன்னெடுக்கலாம் என்ற நிலைப்பாட்டில் அரச தரப்பினர் உள்ளனர்.
வாழ்க்கைச் செலவுகள் அதிகரித்துள்ள நிலையில் சமையல் எரிவாயுவுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.
அரசின் இவ்வாறான செயற்பாடுகளால் நாட்டு மக்கள் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளனர்- என்றார். (ஓ.4)



## மாணவர்களை கௌரவிக்கும் கல்வி மேம்பாட்டு விழா

சாவகச்சேரி,ஜூலை 30
கைதடி பிரதேசத்தைச் சேர்ந்த மாணவர்களை கௌரவிக்கும் "கல்வி மேம்பாட்டு விழா 2021" கைதடி விநாயகர் மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.
கைதடி மக்கள் நலன் பேணும் நட்புறவுக் கழகத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக சம்பத் வங்கியின் வடக்கு மாகாண பிராந்திய முகாமையாளர் இ.குமணன், சிறப்பு விருந்தினராக பூநகரி பிரதேச செயலக அபிவிருத்தி அலுவலர் திருமதி கல்சியா துபிலன் ஆகியோர் கலந்துகொண்டனர்.
கடந்த ஐந்தாம் தரப் புலமைப்பரிசில் பரீட்சையில் வெட்டுப்புள்ளிக்கு மேல் புள்ளிகள் பெற்ற மாணவர்கள், க.பொ.த. உயர்தர பரீட்சையில் அதிகூடிய புள்ளிகள் பெற்று பல்கலைக்கழக அனுமதி பெற்ற மாணவர்கள், தேசிய கல்வியியல் கல்லூரிகளுக்கு அனுமதி பெற்ற மாணவர்கள் மற்றும் பல்கலைக்கழகங்களில் பட்டம் பெற்ற மாணவர்கள் என 41 பேர் இதன்போது கௌரவிக்கப்பட்டனர். (ஐ-9)

## போலியான பொலிஸ் ஜீப்

### மக்களுக்கு எச்சரிக்கை

கொழும்பு,ஜூலை 30
ரம்புக்கனை பொலிஸ் நிலையத்துக்குரிய வாகனம் என்று குறிப்பிட்டு சமூக வலைத்தளங்களில் வெளியிடப்பட்டுள்ள புகைப்படத்தில் காணப்படும் ஜீப் வண்டி இலங்கை பொலிஸ் அல்லது ரம்புக்கனை பொலிஸ் நிலையத்துக்கு சொந்தமானதல்ல என்று பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.
வாரியப்பொல பிரதேசத்தில் வாகனங்களை விற்பனை செய்யும் நபரொருவர் தனது ஜீப் வண்டியில் மக்களை ஏமாற்றும் நோக்கில் இந்தப் பெயரைப் பதிவிட்டுள்ளார். இது தொடர்பில் ஜீப் வண்டியின் உரிமையாளர் கடந்த ஏப்ரல் மாதம் 10 ஆம் திகதி ரம்புக்கனை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு, பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.
கடந்த 3 மாதங்களுக்கு முன்னர் இடம்பெற்ற சம்பவம் தொடர்பிலேயே தற்போது சமூக வலைத்தளங்களில் புகைப்படங்கள் பகிரப்படுகின்றன. இது தொடர்பில் மக்கள் தவறாக வழிநடத்தப்படக்கூடாது என்று பொலிஸ் தலைமையகம் மேலும் தெரிவித்துள்ளது. (ஓ.4)




## அன்டிஜென் பரிசோதனையில் ஒருவருக்கு கோவிட் தொற்று

சாவகச்சேரி,ஜூலை 30
சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தால் மேற்கொள்ளப்பட்ட அன்டிஜென் பரிசோதனையில் ஒருவருக்கு தொற்று ஏற்பட்டுள்ளது.
நாவற்குழி மற்றும் மட்டுவில் பகுதிகளில் தனிமைப்படுத்தப்பட்டுள்ள குடும்பங்களுக்கான பரிசோதனை நேற்றுமுன்தினம் மேற்கொள்ளப்பட்டது. நாவற்குழியில் பத்துப் பேருக்கும் மட்டுவிலில் ஆறு பேருக்கும் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. இவர்களில் மட்டுவிலைச் சேர்ந்த ஒருவருக்குத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது. (ஐ-9)

## பெண்கள் எதிர்கொள்ளும் உளவியல் வன்முறைகள்

### விழிப்புணர்வு அவசியமென வலியுறுத்து

கொழும்பு,ஜூலை 30
பெண்கள் முகங்கொடுக்கும் உடலியல் ரீதியான வன்முறைகள் மற்றும் பாலியல் துன்புறுத்தல்கள் தொடர்பில் பொலிஸ் நிலையங்களில் மேற்கொள்ளப்படும் முறைப்பாடுகளுடன் ஒப்பிடுகையில், அவர்கள் எதிர்கொள்ளும் உளவியல் ரீதியான துன்புறுத்தல்கள் பற்றிய முறைப்பாடுகள் மிகவும் குறைவான மட்டத்திலேயே காணப்படுகின்றன.
எனவே அத்தகைய வன்முறைகள் தொடர்பில் பொதுமக்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும் என்று சிறுவர் மற்றும் மகளிர் விவகார அமைச்சின் மகளிர் பிரிவின் பணிப்பாளர் மாலினி உபசேன வலியுறுத்தியுள்ளார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
நாட்டில் இடம்பெறும் பெண்களுக்கு எதிரான வன்முறைகளை இறுக்கமான சட்டங்களின் ஊடாக மாத்திரம் முழுமையாக முடிவுக்குக் கொண்டுவரமுடியாது. மாறாக பெண்கள் மற்றும் அவர்களது உரிமைகள் தொடர்பான சமூகக் கண்ணோட்டத்திலும் ஆரோக்கியமான மாற்றமொன்று ஏற்படவேண்டியது அவசியமாகும்.
பெண்கள் எதிர்நோக்குகின்ற உளவியல் ரீதியான துன்புறுத்தல்கள் எங்கும் பதிவு செய்யப்படுவதில்லை. பெண்களில் பெரும்பாலானோர் அதனை வாழ்நாள் முழுவதும் அனுபவிக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். பெண்கள் மீதான அடக்குமுறைகளைப் பொறுத்தவரை, அவற்றை பாலியல் துன்புறுத்தல்கள் மற்றும் குடும்ப வன்முறைகளுக்குள் மாத்திரம் மட்டுப்படுத்திவிட முடியாது. மாறாக பொருளாதார, சமூக, சமய, கலாசாரம் உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளின் கீழும் பெண்கள் அடக்குமுறைகளுக்கும், தொல்லைகளுக்கும் முகங்கொடுக்கின்றனர்.
இவ்வாறான வன்முறைகள் மற்றும் துஷ்பிரயோகங்களுக்கு முகங்கொடுக்கும் பெண்கள், அதுகுறித்து தெரியப்படுத்துவதற்கு ஏற்றவகையில் 1938 என்ற அவசர தொலைபேசி இலக்கம் பயன்பாட்டில் உள்ளது.
அதேபோன்று இதுபோன்ற சம்பவங்களின்போது செயற்பட வேண்டிய விதம் தொடர்பில் ஆலோசனைகளை வழங்கக்கூடிய ஆலோசகர்கள் நாடளாவிய ரீதியிலுள்ள அனைத்து பிரதேச செயலக பிரிவுகளின் கீழும் நியமிக்கப்பட்டுள்ளனர்- என்றார்.
இது தொடர்பில் சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் சட்ட அமுலாக்கப் பிரிவின் அதிகாரி சட்டத்தரணி சஜீவனி அபயகோன் தெரிவிக்கையில்,
பெண்கள் மீதான குடும்ப வன்முறைகளின்போது பெண்களின் உரிமைகள் மாத்திரம் மீறப்படுவதாக அதனை மட்டுப்படுத்திக்கொள்வது ஏற்றுக்கொள்ளமுடியாததாகும்.
பெண்கள் மற்றும் சிறுவர் பாதுகாப்பு தொடர்பில் எமது நாட்டில் காணப்படும் சட்டங்கள் தொடர்பில் பலருக்கு போதியளவான தெளிவில்லை. இலங்கையின் எழுத்தறிவு வீதம் உயர்வாகக் காணப்படுகின்றபோதிலும், சட்ட அடிப்படைகள் தொடர்பில் பொதுமக்கள் கொண்டிருக்கும் அறிவு மிகவும் குறைவான மட்டத்திலேயே காணப்படுகின்றது. ஆகவே தண்டனைகள் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் போதிய விழிப்புணர்வை ஏற்படுத்துவது அவசியமானதாகும்- என்றார். (ஒ.4)

## ஐக்கிய ம.சக்தியின் ஆட்சியில் 19 ஆவது திருத்த கோட்பாடுகள்

### கிரியெல்ல நம்பிக்கை

கொழும்பு,ஜூலை 30
ஐக்கிய மக்கள் சக்தி மீண்டும் ஆட்சிபீடமேறினால் 19 ஆவது திருத்தத்தை அடிப்படையாகக் கொண்டு ஜனநாயகத்தை வலுப்படுத்தும் திருத்தமொன்றைக் கொண்டு வரத் தயாராக உள்ளது என்று நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்
நல்லாட்சி அரசால் லஞ்ச, ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவானது சுயாதீனமான கட்டமைப்பாகக் காணப்பட்டது. அரசமைப்புக்கான 19 ஆவது திருத்தத்தின் ஊடாக நீதிமன்றம், நாடாளுமன்றம் மற்றும் ஜனாதிபதிக்கான அதிகாரங்கள் சமாந்தரமான முறையில் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தன.
இருப்பினும் தற்போது அவை நடைமுறையில் இல்லாமையால் லஞ்ச, ஊழல் குற்றச்சாட்டுக்களுக்கு உள்ளாகியிருந்தவர்கள் அடுத்தடுத்து விடுவிக்கப்படுகின்றனர்.
எனவே எமது கட்சி ஆட்சிபீடமேறினால் மாற்றம் ஒன்றை ஏற்படுத்துவோம். என்றார். (ஓ.4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## கண்கெட்ட பின்!

இலங்கை தேசிய இனப்பிரச்சினையால் பல இழப்புக்களைச் சந்தித்தது. ஆனபடியால் இந்த நாட்டுக்கு தேசிய நல்லிணக்கம் மிகவும் அவசியம். தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்தத் தவறியதால்தான் மாறிமாறி ஆட்சிமாற்றங்கள் ஏற்பட்டன. எந்த அரசாக இருந்தாலும் தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்தத் தவறினால் ஆட்சி கவிழ்வது உறுதி இவ்வாறு தெரிவித்துள்ளார் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.


மைத்திரி மட்டுமல்ல முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாகூட கடந்த சில மாதங்களுக்கு முன்னர் இதே கருத்தைத்தான் வெளிப்படுத்தியிருந்தார். அரசு சிறுபான்மை மக்களுக்கானதாகவும் அமைய வேண்டும் என்பதாக அமைந்திருந்தது அவருடைய கருத்து. இந்த இரு தலைவர்களின் கருத்துக்களில் மாற்று நிலைப்பாடு இல்லை. ஆனால், கேள்வி என்னவெனில் இவர்கள் தமது ஆட்சிக்காலத்தில் ஏன் இந்த நல்லிணக்கத்தை ஏற்படுத்த முயலவில்லை? என்பதே.

அதிலும் குறிப்பாக மைத்திரிபால சிறிசேனவை நோக்கி இந்தக் கேள்வியை எழுப்பக்கூடிய சகல தகுதிகளும், தார்மீக உரிமையும் சிறுபான்மை மக்களுக்கு உண்டு. காரணம், பலம் பொருந்திய ஆட்சியாளராகக் கருதப்பட்ட மஹிந்த ராஜபக்சவை, வீட்டுக்கு அனுப்பி மைத்திரியை ஆட்சியில் ஏற்றியவர்கள்சிறுபான்மைமக்கள்தான். சிறுபான்மையின மக்கள் குறிப்பாகத் தமிழர்கள் தனக்கு ஆற்றிய இந்த உதவியை ஒருபோதும் மறவேன் என்று வட மாகாணத்தில் இடம்பெற்ற பல நிகழ்வுகளில் பல மேடை களில் மைத்திரி வெளிப்படையாகவே ஏற்றிருந்தார். எனின், அந்த உதவிக்கான பதிலுதவியாக மைத்திரி தன் ஆட்சிக்காலத்தில் என்னத்தைச் செய்துவிட்டுச் சென்றார் என்று அவர் தன்னைத்தானே சுய பரிசீலனை செய்துகொள்ள வேண்டும்.

மைத்திரியின் ஆட்சிக்காலத்தில் தற்போதைய அரசு கைக்கொள்ளும் அடாவடித்தனங்கள், அடக்குமுறை கள் கொஞ்சம் குறைந்திருந்தனதான். குறைந்தபட்சம் நினைவேந்தல்களை நடத்துவதற்கும், இறந்த வர்களை கண்ணீருடன் அஞ்சலிக்கவும் அனுமதிகள் வழங்கப்பட்டிருந்தனதான். ஆனால், சிறுபான்மை மக்களால் அமைக்கப்பட்ட அரசு என்ற தோரணைக்கான எந்தப் பதிலுபகாரமும் மைத்திரி அரசால் ஆற்றப்படவில்லை என்பதுதான் உண்மை.

தமிழர் தாயகத்தின் தீர்க்கப்படாத நெடுநாள் பிரச்சினைகளான காணாமல் ஆக்கப்பட்டவர்களின் நிலைப்பாட்டை வெளிப்படுத்தல், காணி விடுவிப்பு, பௌத்த மயமாக்கல், சிங்களத் திணிப்பு எல்லா வற்றுக்கும் மேலாக அரசியல் கைதிகளின் விடுதலை இவற்றுக்கு என்ன தீர்வை மைத்திரி தந்தார்?. என்றால் பதில் பெரும் 'வெற்றிடம்'தான். அரசியல் கைதியான ஆனந்த சுதாகரனின் விடுதலைகூட அவரால் சாத்தியமாக்கப்படவில்லை.

கோத்தாபய அரசு தனக்கு விசுவாசமானவர்களை, நீதிமன்றத்ததால் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டவர்களைக்கூட பொதுமன்னிப்பின் கீழ் விடுதலை செய்துள்ளது. இதற்கு தமிழர் தாயகத்தில் மட்டுமல்ல சிங்கள மக்கள் மத்தியிலும் பெரும் எதிர்ப்பலை ஏற்பட்டுள்ளது. கோத்தாபய அரசு செய்தது மகா தவறாகவே இருக்கட்டும். ஆனால், இந்தத் தற்துணிவு மைத்திரிக்கு இம்மியும் இருக்கவில்லை. ஆட்சிக்காலத்தில் இன நல்லிணக்கத்துக்கு ஏற்ற செயல்களைச் செய்யாமல் கள்ள மௌனம் காத்துவிட்டு, தற்போது இன நல்லிணக்கம்பற்றி பாடமெடுப்பது, சாத்தான் வேதமோதுவதற்குச் சமனானதல்லாமல் வேறென்ன?.



# ஆட்சிக் கவிழ்ப்புக்கு தருணம் பார்த்திருக்கின்றோம்

### கூறுகிறார் ராஜித

**கொழும்பு, ஜூலை 30**



**இந்த ஆட்சியை எவ்வாறு கவிழ்க்க வேண்டும் என்பது எமக்கு தெரியும். அதற்கான தருணம் வந்ததும் அதனை நிச்சயம் செய்வோம். 2 ஆட்சி மாற்றங்களில் பங்கேற்ற அனுபவம் எனக்கு உள்ளது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் களுத்துறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், முன்னாள் சுகாதார அமைச்சருமான ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.**

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

கொரோனா பரவல் மற்றும் அதனை கட்டுப்படுத்துவதில் அரசு தோல்வி கண்டுள்ள விதம் பற்றியும் முன்னாள் சுகாதார அமைச்சர் என்ற வகையில் அவர் இதன்போது கருத்து வெளியிட்டார். அவர் தெரிவிக்கையில்;

நாட்டில் சுகாதாரத்துறை இன்று கீழ்மட்டத்துக்கு வந்துள்ளது. மனிதன் உயிர் வாழ்வதற்கு முதலில் உணவு அவசியம். அதற்கு அடுத்த படியாக மருந்து தேவை. இன்று மருந்து தட்டுப்பாடு நிலவுகின்றது. நாளை உணவுக்கும் தட்டுப்பாடு வரும் அபாயம் உள்ளது. ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் சுபீட்சத்தின் நோக்கு என்ற திட்டம் இதுவா என கேட்க விரும்புகின்றோம்?

கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தும் பொறுப்பை மருத்துவர்கள் மற்றும் விஞ்ஞானிகளிடம் கையளிப்பது எனவும், அதற்கு தேவையான உதவியை மட்டுமே தாம் வழங்குவோம் எனவும் ஜேர்மன் ஜனாதிபதி குறிப்பிட்டார். கனடா, ஆஸ்திரேலிய பிரதமர்களும் இதனையே குறிப்பிட்டனர். ஆனால் இங்கு என்ன நடக்கின்றது? கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கு ஜனாதிபதியால் செயலணி ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அந்த செயலணியில் உள்ள பலருக்கு கொரோனா தொடர்பில் போதிய விடயங்கள் தெரியாது. இதற்கு முன்னர் ஏதேனுமொரு தொற்றை கட்டுப்படுத்துவதற்குக் கூட அவர்களின் பங்களிப்பு இருக்கவில்லை. புத்தி இல்லாத சிலர் தமக்கு எல்லாம் தெரியும் என நினைப்பதால்தான் இன்று இந்நிலைமை ஏற்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தும் பொறுப்பு முழுமையாக சுகாதார அமைச்சிடம் கையளிக்கப்பட்டிருந்தால், நாட்டில் பலவீனமான தலைமைத்துவம் இருந்தால் கூட தற்போதைய நிலைமை ஏற்பட்டிருக்காது. ஏனெனில் சுகாதார அமைச்சிடம் தொற்று நோயை கட்டுப்படுத்துவதற்கான சிறந்த கட்டமைப்பு, வலைப்பின்னல் உள்ளது. பொது சுகாதார வைத்திய அதிகாரி, சுகாதாரப் பரிசோதகர்கள், குடும்ப நல உத்தியோகத்தர்கள் என அந்த கட்டமைப்பு உள்ளது.

அதேவேளை, இந்த ஆட்சியை கவிழ்ப்பதற்கான சூழல் இன்னும் உருவாகவில்லை. மக்கள் மத்தியில் அதற்கான அதிருப்தி அலை உருவாகும். அந்த தருணம் வரும்போது நிச்சயம் மாற்றத்தை ஏற்படுத்துவோம். ஆட்சியை எவ்வாறு மாற்றுவது என்பது எமக்கு தெரியும். அவ்வாறான முயற்சிகளில் இரு தடவைகள் பங்கேற்றுள்ளேன் - என்றார். (ஒ,44)

# தனிமைப்படுத்தப்பட்டார் அமைச்சர் விமல் வீரவன்ச

கொழும்பு, ஜூலை 30

தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும், அமைச்சருமான விமல் வீரவன்ச நேற்றிலிருந்து 14 நாள்களுக்கு சுயதனிமைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

அமைச்சரின் பாதுகாப்பு பிரிவு அதிகாரிகள் சிலருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதியானதையடுத்தே, அமைச்சரும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளார்.

அத்துடன், விமல் வீரவன்ச வகிக்கும் கைத்தொழில் அமைச்சின் அலுவலகம் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது. (ஒ,44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்கவேண்டாம் என்று சொல்லவில்லை

## ஆணைக்குழு விளக்கம்

**கொழும்பு,ஜூலை 30**

**பயங்கரவாதத் தடைச்சட்டத்தை ஒருபோதும் நீக்கக்கூடாது என்று ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் இடைக்கால அறிக்கையில் எங்கும் பரிந்துரைக்கவில்லை என்று ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.**

முன்னைய ஆணைக்குழுக்கள் மற்றும் குழுக்களின் தீர்மானங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் அடுத்தகட்ட நடவடிக்கைகளை எடுத்தல் தொடர்பாக ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டிருக்கும் உயர் நீதிமன்ற நீதியரசர் ஏ.எச்.எம்.டி. நவாஸ் தலைமையிலான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவில், கலாநிதி ஜஹான் பெரேரா சாட்சியமளித்தார்.

இதன்போது குறுக்கிட்ட ஆணைக் குழுவின் தலைவர்,

பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்கக்கூடாது என்று இடைக்கால அறிக்கையில் ஆணைக்குழு பரிந்துரை செய்துள்ளது என்று ஒருசில இணையத்தளங்களில் செய்தி வெளியிடப்பட்டுள்ளன. இது முற்றிலும் பொய்யான செய்தியாகும். பயங்கரவாதத் தடைச்சட்டத்தில் திருத்தம் மேற்கொள்வது தொடர்பில் ஆணைக்குழு இரண்டு விதமான பரிந்துரைகளை முன்வைத்துள்ளது. ஒன்று குறுகியகாலத் திட்டம் மற்றது நீண்டகாலத் திட்டம். குறுகியகாலத் திட்டமாக, எவரேனும் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டால், அவர் தொடர்பான பரிந்துரைகளை ஜனாதிபதிக்கு சமர்ப்பிக்க, அனைத்து இனங்களையும் பிரதிநிதித்து வப்படுத்தும் வகையில் ஜனாதிபதிக்கு ஆலோசனை வழங்கும் குழு அமைக்கப்பட வேண்டும்.

ஆலோசனைக்குழுவின் பரிந்துரைக்கமைய ஜனாதிபதி குறித்த நபரை தடுப்புக்காவலில் நீண்டகாலம் வைக்காமல் வீட்டுக்காவலில் வைக்க உத்தரவிடல், அதே போன்று நீண்டகாலம் ஒருவரை தடுப்புக்காவில் வைத்துக்கொண்டிருக்காமல் அவருக்கு எதிராக குற்றச்சாட்டுக்கள் இருந்தால், உடனடியாக வழக்குத் தொடுக்கவும், இல்லாவிட்டால் அவரை விடுவிக்க வேண்டும் போன்ற உடடியான திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று பரிந்துரை செய்திருக்கின்றது.- என்றார். (ஒ.4)

# கப்பல் விபத்து பாதிப்புக்களை கண்டறிய நாடாளுமன்றக் குழு

## அமைக்கக் கோருகின்றார் ரணில்



கொழும்பு,ஜூலை 30

இலங்கைக் கடற்பரப்பில் அண்மையில் தீப்பற்றிய எம்.வி எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலால் ஏற்பட்ட பாதிப்புக்கள் தொடர்பில் பரிசீலித்து, பரிந்துரைகளைச் சமர்ப்பிப்பதற்கு நாடாளுமன்ற விசேட குழுவை அமைக்க வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரணில் விக்ரமசிங்க கோரிக்கை விடுத்துள்ளார்.

அவரது கோரிக்கை நாடாளுமன்ற ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் நாள்களில் நாடாளுமன்றிலும் தெரியப்படுத்தப்படும்.

எதிர்வரும் 3 ஆம் திகதி நாடாளுமன்ற அமர்வுகள் முன்னெடுக்கப்படுகின்ற நிலையில், சபாநாயகரால் இந்தக் கோரிக்கை அறிவிக்கப்படும்.

பேர்ள் கப்பல் மூழ்கியதால், இலங்கையில் ஏற்பட்ட மிக மோசமான கடல்சார் சுற்றுச்சூழல் அனர்த்தம், கடல்சார் மற்றும் கடல்வாழ் உயிரினங்களின் அழிவு, அதனால் வாழ்வாதாரத்தை இழந்த மக்கள் மற்றும் தேசிய பொருளாதாரத்துக்கு ஏற்பட்ட தாக்கம் ஆகியவற்றை பரிசீலித்து பரிந்துரைகளை முன்வைக்க வேண்டும் என்று ரணில் தனது பிரேரணையில் கோரியுள்ளார். (ஒ.4)

# ஹிஷாலினியின் சடலம் மீண்டும் பரிசோதனைக்கு

## மருத்துவர் குழு நியமனம்



கொழும்பு,ஜூலை 30

முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீனுடைய இல்லத்தில் பணிக்கமர்த்தப்பட்டு, தீக்காயங்களுக்குள்ளான நிலையில் உயிரிழந்த சிறுமி ஹிஷாலினியின் சடலம், இரண்டாவது தடவையாகவும் பரிசோதனைக்கு உட்படுத்தப்படவுள்ளது. இதற்காக விசேட மருத்துவ அதிகாரிகள் மூவரடங்கிய குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மற்றும் சட்டமா அதிபரின் ஆலோசனைக்கமைவாக, ஹிஷாலினியின் சடலம் இரண்டாவது தடவையாகவும் பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தப்படவுள்ளது.

இதற்காக கொழும்பு பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்தின் நீதிமன்ற மருத்துவ அறிவியல் தொடர்பான பேராசிரியர் ஜீன் பெரேரா, கொழும்பு பல்கலைக்கழகத்தின் மருத்துவபீடத்தின் நீதிமன்ற மருத்துவ அறிவியல் பிரிவின் பிரதானி சிரேஷ்ட விரிவுரையாளர் மருத்துவர் சமீர குணவர்தன, பேராதனை போதனா மருத்துவமனையின் நீதிமன்ற மருத்துவ அறிவியல் தொடர்பான விசேட நீதிமன்ற மருத்துவ நிபுணர் பிரபாத் சேனசிங்க ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்த விசேட குழுவால் இன்று வெள்ளிக்கிழமை சிறுமியின் சடலம் சடலம் தோண்டி எடுக்கப்படும்.

பிரதேசத்தின் நீதவான் நீதிபதியின் கண்காணிப்பின் கீழ் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படும். அத்துடன் இந்தத் துறையில் நிபுணத்துவமுடைய மேலும் பல நிபுணர்களும் குறித்த பகுதிக்குச் செல்லவுள்ளனர் - என்றார். (ஒ.4)

# ரிஷாத் வீட்டில் பணியாற்றிய சிறுமிகளிடம் வாக்குமூலம்

கொழும்பு,ஜூலை 30

முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீனுடைய இல்லத்தில் பணிபுரிந்த 11 பெண்களில், ஐவரிடம் வாக்குமூலம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

குறித்த பெண்களில் எவரேனும் துன்புறுத்தல்களுக்கு அல்லது துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனரா என்பது தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று பொலிஸ் ஊடகப்பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

உயிரிழந்த ஹிஷாலினி என்ற சிறுமியுடன் கடந்த 2010 ஆம் ஆண்டு முதல் 11 பெண்கள் குறித்த வீட்டில் பணிபுரிந்துள்ளனர் என்று விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது. இவர்கள் அனைவருமே டயகம உள்ளிட்ட பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள்.

இவ்வாறு பணிபுரிந்து 11 பெண்களில் ஐவரிடம் இதுவரையில் வாக்குமூலம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இந்த வாக்குமூலங்களில் கூறப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பிலும் விசாரணைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இவர்களில் எவராவது துன்புறுத்தல்களுக்கு அல்லது துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனரா என்பது தொடர்பில் பொரளை பொலிஸார், சிறுவர் மற்றும் மகளிர் பிரிவினர் மற்றும் கொழும்பு தெற்கு குற்ற விசாரணைப் பிரிவினர் ஆகியோர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஒ.4)

# துப்பாக்கிச் சூட்டில் சிப்பாய் உயிரிழப்பு

அம்பாறை,ஜூலை 30

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி இராணுவச் சிப்பாய் ஒருவர் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் அம்பாறை இங்கினியாகல நாமல்ஓயா பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் இரவு நடந்துள்ளது.

விலங்குகளை வேட்டையாடுவதற்காக மூவர் நாமல்ஓயா நாமல்தலாவ என்ற காட்டுப் பகுதிக்குச் சென்றுள்ளனர்.

மூவரில் 27 வயதுடைய நரொருவர் துப்பாக்கிச்சூட்டுக் காயத்துடன் இங்கினியாகல மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார். உயிரிழந்த நபர் இராணுவச் சிப்பாய் என்று விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் 36 வயதுடைய சந்தேக நபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். அவரிடமிருந்து துப்பாக்கியொன்றும் கைப்பற்றப்பட்டுள்ளது.

மான் ஒன்றைத் துரத்திச்சென்று அதன்மீது துப்பாக்கிச் சூட்டை நடத்தினேன். இதன்போதே நண்பன் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகினார் என்று கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர் தெரிவித்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஒ.4)

# தேர்தல் சட்டங்கள் மறுசீரமைப்பு: பகுப்பாய்வுக்கு நிபுணர்கள் குழு

கொழும்பு,ஜூலை 30

தேர்தல் சட்டங்கள் மற்றும் தேர்தல் முறைமை மறுசீரமைப்புக்கான நாடாளுமன்ற விசேட குழுவுக்கு சமர்பிக்கப்பட்டுள்ள முன்மொழிவுகளைப் பகுப்பாய்வு செய்வதற்கு நிபுணர்கள் குழு தெரிவுசெய்யப்பட்டுள்ளது என்று குழுவின் தலைவர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

இந்த நிபுணர்கள் குழுவின் தலைவராக சிறி ஜயவர்தனபுர பல்கலைக்கழக துணைவேந்தர் சிரேஷ்ட பேராசிரியர் சுதந்த லியனகே நியமிக்கப்பட்டுள்ளார். அத்துடன் குழுவின் ஏனைய உறுப்பினர்களாக கலாநிதி அநுர கருணாதிலக்க, சட்டத்தரணி சுரேன் பர்னாந்து, பேராசிரியர் பி. பாலசுந்தரம்பிள்ளை மற்றும் பாலச்சந்திரன் கௌதமன் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை தேர்தல் சட்டங்கள் மற்றும் தேர்தல் முறைமையில் மறுசீரமைப்புகளை மேற்கொள்ள நியமிக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற விசேட குழுவுக்கு 21 அங்கீகரிக்கப்பட்ட அரசியல் காட்சிகள், பொதுமக்கள் மற்றும் 155 சிவில் அமைப்புக்களால் முன்மொழிவுகள் சமர்பிக்கப்பட்டுள்ளன என்று குழுவின் செயலாளர் குஷானி ரோஹனதீர தெரிவித்துள்ளார். (ஒ.4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜப்பானிலிருந்து 7 லட்சம் தடுப்பூசிகள்

**கொழும்பு, ஜூலை 30**

**ஜப்பானிலிருந்து நாளை சனிக்கிழமை 7 லட்சத்து 28 ஆயிரத்து 460 அஸ்ராஜெனகா தடுப்பூசிகள் கிடைக்கப்பெறும் என்று சுகாதார அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சி தெரிவித்துள்ளார்.**




இவ்வாறு கிடைக்கப்பெறும் தடுப்பூசிகள் முத்றகட்டமாக அஸ்ராஜெனகா தடுப்பூசியைப் பெற்றவர்களுக்கு இரண்டாம் கட்டமாக வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை இலங்கைக்கு 138 லட்சம் (13.8 மில்லியன்) தடுப்பூசிகள் இதுவரையில் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. அதற்கமைவாக 1.2 மில்லியன் அஸ்ராஜெனகா தடுப்பூசிகளும், ஒரு லட்சத்து 65 ஆயிரம் ஸ்புட்னிக் தடுப்பூசிகளும், 10.7 மில்லியன் சைனோஃபோர்ம் தடுப்பூசிகளும், 2 லட்சத்து 5920 பைஸர் தடுப்பூசிகளும், 1.5 மில்லியன் மொடர்னா தடுப்பூசிகளும் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளன என்று சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவின் விசேட மருத்துவ நிபுணர் சமித கினிகே தெரிவித்துள்ளார். (ஒ.4)

## கிராமப் பகுதிகளுக்கு சுத்தமான குடிதண்ணீர்

### அரசு நடவடிக்கை

கொழும்பு,ஜூலை 30

நீர் வழங்கல் திட்டங்களில் உள்ளடக்கப்படாத கிராமப் பிரதேசங்களுக்கு, சமூக நீர் வழங்கல் திட்டம் ஊடாக சுத்தமான குடிதண்ணீரை பெற்றுக்கொடுக்கத் திட்டமிடப் பட்டுள்ளது என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

விசல் மாத்தளை நீர் வழங்கல் திட்டம், அலரி மாளிகையில், இணைய தொழில்நுட்பம் ஊடாக மக்கள் மயப்படுத்தப்பட்டது. இந்தத் திட்டத்தின் ஊடாக மாத்தளை நகரம் மற்றும் அதனை சூழவுள்ள பிரதேசங்களுக்கு 24 மணித்தியாலங்கள் நீர் விநியோகத்தை முன்னெடுக்க எதிர்பார்க்கப்பட்டுள்ளது. இதில் உரையாற்றிய பிரதமர் தெரிவிக்கையில்,

நாட்டில் பல்வேறு பிரதேசங்களில் மக்கள் சுத்தமான குடிதண்ணீர் இன்றி பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். இதற்காக 'அனைவருக்கும் நீர்' என்ற ஒன்றிணைந்த திட்டத்தை முன்வைக்க முடிந்துள்ளது.

குறிப்பாக கிராம மக்களே பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். அவர்கள் குடிதண்ணீரைப் பெற்றுக்கொள்வதற்கு பல கிலோமீற்றர் தூரம் செல்ல வேண்டியுள்ளது.

மக்களுக்கு சுத்தமான குடிதண்ணீரைப் பெற்றுக்கொடுப்பது அரசின் பொறுப்பாகும். இன்று மக்கள் மயப்படுத்தப்படும் விசல் மாத்தளை நீர் வழங்கல் திட்டமும் எமது ஆட்சிக் காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட திட்டமாகும்.

எதிர்வரும் நான்கு வருடங்களில் 47 லட்சம் குடும்பங்களுக்கு சுத்தமான குடிதண்ணீரைப் பெற்றுக்கொடுப்பதே எமது குறிக்கோள்.

அதற்காக உள்நாட்டு மற்றும் சர்வதேச நிதியைப் பயன்படுத்தி, நீர் வழங்கல் திட்டங்கள் நாடளாவிய ரீதியில் செயற்படுத்தப்படும். இவ்வாண்டு மாத்திரம் 2 லட்சத்து 45 ஆயிரம் வீடுகளுக்கு புதிதாக நீர் விநியோகத்தைப் பெற்றுக்கொடுப்பதற்கு. 33 திட்டங்களை மக்கள் மயப்படுத்துவதற்கு நீர் வழங்கல் அமைச்சு தயாராகவுள்ளது.

நம் நாட்டில் உள்ள ஆறுகளும் மாசடைந்து வருகின்றன. சுரகிமு கங்கா திட்டத்தின் கீழ் 17 ஆறுகளை பாதுகாப்பதற்கும், மக்களுக்கு சுத்தமான குடிதண்ணீரை வழங்குவதற்கும் நாங்கள் திட்டங்களை ஆரம்பித்துள்ளோம்.

அத்துடன் நாடளாவிய ரீதியில் 40 விகிதமாகக் காணப்படும் குழாய் நீர் வழங்கலை 2025ஆம் ஆண்டளவில் 80 விகிதமாக அதிகரிப்பதே எமது இலக்கு- என்றார். (ஒ.4)



## தனித்து பயணிப்பதே தற்போதுள்ள ஒரேவழி

### சு.க வுக்கு ஆலோசனை

கொழும்பு,ஜூலை 30

அரசுக்குள் எமது இருப்பைத் தக்க வைத்துக்கொள்வதை விடவும், மக்களிடம் எமது கட்சியைக் கொண்டுசேர்க்க வேண்டும். மீண்டும் தனிக் கட்சியாக நாம் பயணிக்க வேண்டும் என்பதே நாம் இப்போது முன்னெடுக்க வேண்டிய வேலைத்திட்டம் என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஆலோசகரும், முன்னாள் செயலாளருமான பேராசிரியர் ரோஹன லக்ஸ்மன் பியதாஸ தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தொடர்ச்சியான நிராகரிப்புகளுக்கு மத்தியில் அரசில் அங்கம் வகிப்பதால் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு கிடைக்கப்போவது ஒன்றும் இல்லை. அரசுக்கு எதிரான மக்கள் அலையொன்று உருவாகிக்கொண்டுள்ள நிலையில், மக்களின் பக்கமே நாம் நிற்க வேண்டும். இது குறித்து இப்போது தீர்மானம் எடுத்தால் எம்மால் அடுத்த தேர்தல்களில் பலமான கட்சியாக உருவாக முடியும். பழைய ஆதரவாளர்களை ஒன்றிணைக்கவும் முடியும்.- என்றார். (ஒ.4)

## போதைப்பொருள் கடத்தல்; பெண் கைது

கொழும்பு,ஜூலை 30

போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டில் பெண்ணொருவர் கொழும்பு குற்றப் புலனாய்வுப் பிரிவு அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டுள்ளார். குறித்த பெண், தெஹிவளைப் பகுதியைச் சேர்ந்த 41 வயதுடையவர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவரது வங்கிக் கணக்குகளிலிருந்து போதைப்பொருள் கடத்தலினூடாக சம்பாதிக்கப்பட்டது என்று நம்பப்படும் 6 பில்லியன் ரூபா பணமும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஒ.4)

### சிறுவர்,பெண்கள் மீதான

## துஷ்பிரயோகத்தைக் கண்டித்து மூங்கிலாறு மக்கள் போராட்டம்

முல்லைத்தீவு,ஜூலை 30

சிறுவர் மற்றும் பெண்கள் மீது மேற்கொள்ளப்படும் துஷ்பிரயோகங்களைக் கண்டித்து முல்லைத்தீவு மூங்கிலாறு பிரதேச மக்கள் கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்றை நேற்றுமுன்தினம் மேற்கொண்டனர்.

குறிப்பாக மலையகத்தைச் சேர்ந்த சிறுமியான ஹிஷாலினியின் உயிரிழப்புக்கு நீதிவேண்டி இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மூங்கிலாறு தெற்கு கிராம அபிவிருத்தி சங்கத்தின் ஏற்பாட்டில் கிராமத்தில் உள்ள சமூகமட்ட அமைப்புக்களின் பங்குபற்றலுடன் கவனவீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. மூங்கிலாறு பிரதேசத்தில் இருந்து கோஷங்களை எழுப்பியவாறு வந்த மக்கள் புதுக்குடியிருப்பு - பரந்தன் முதன்மை வீதியில் வந்து தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

போராட்டத்தில் ஈடுபட்டோர் கருத்துத் தெரிவிக்கையில்,

"வடக்கு கிழக்கு உள்ளிட்ட நாட்டில் எந்த ஒரு பகுதியிலும் பெண்களுகள் மற்றும் சிறுவர்களுக்கு எதிராக இடம்பெறும் வன்முறைகள் நிறுத்தப்படவேண்டும். சிறுவர்கள் வீட்டுவேலைக்கோ அல்லது ஏனைய வேலைக்கோ சட்டரீதியாக அனுமதிக்கக்கூடாது. சிறுவர்களின் உரிமைகள் பாதுகாக்கப்படவேண்டும். பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி உடனடியாக கிடைக்கவேண்டும்.

கிருசாந்தி தொடக்கம் ஹிஷாலினி வரையில் தொடர்ந்து பெண்களுக்கு எதிரான வன்முறைகள் நடைபெற்றுக்கொண்டுதான் இருக்கின்றன. இவ்வாறான குற்றவாளிகள் தண்டிக்கப்படவேண்டும்- என்றனர். (ஐ-19)




## இலங்கை அரசுக்கு எதிராக சர்வதேசத்தை திருப்ப முயற்சி

### எதிர்க்கட்சி சதி என்கிறார் நிதி இராஜாங்க அமைச்சர்

கொழும்பு,ஜூலை 30

சர்வதேசத்தை, இலங்கை அரசுக்கு எதிராக திருப்பி, முதலீடுகளை தடுக்கவும், நாட்டை நெருக்கடிக்குள் தள்ளி, அதன் மூலமாக ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தவும் எதிர்க்கட்சியினர் முயற்சித்து வருகின்றனர் என்று நிதி இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை அரசு ஏற்கனவே மனித உரிமை மீறல்கள், போர் குற்றங்கள் போன்ற வெவ்வேறு குற்றச்சாட்டுக்களால் நெருக்கடியில் உள்ளது. இந்த நிலையில் பொருளாதார ரீதியிலும் நாட்டை நெருக்கடிக்குள் தள்ளுவதே இவர்களின் நோக்கமாகும். அதற்கான செய்தியை இவர்கள் சர்வதேசத்துக்கு வழங்கி வருகின்றனர். குறிப்பாக எதிர்க்கட்சியினர், மங்கள சமரவீர, ரணில் விக்கிரமசிங்க போன்றவர்கள் முயற்சிக்கின்றனர்.

எனவே சர்வதேச கடன்களைப் பெற்றுக்கொள்வதா அல்லது தேசிய உற்பத்திகள் மூலமாக [illegible] பெற்றுக்கொள்வதா என்பது தொடர்பில் அரசு தீர்மானம் எடுக்க வேண்டும்- என்றார். (ஒ.4)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## தொற்றாளர்களுடன் பயணித்த

# இராணுவ பஸ் விபத்து
# இருவர் சாவு மூவர் படுகாயம்

**கொழும்பு, ஜூலை 30**

**பொலநறுவையிலிருந்து மன்னம்பிட்டிய இடைத்தங்கல் சிகிச்சை நிலையத்துக்கு தொற்றாளர்களை ஏற்றிச் சென்ற இராணுவ பஸ்ஸும், பொலநறுவை மருத்துவமனைக்கு தொழிலாளர்களை ஏற்றிச்சென்ற சிறிய ரக ஜீப் வாகனமும் நேருக்கு நேர் மோதுண்டு விபத்துக்குள்ளானது.**



விபத்தில் பெண்கள் இருவர் உயிரிழந்தனர். மேலும் மூவர் படுகாயமடைந்தனர்.
இந்த விபத்து பொலநறுவை, மன்னம்பிட்டி பகுதியில் நேற்றுக் காலை நடந்துள்ளது.
விபத்தில் இறந்தவர்கள் துப்புரவு நிறுவனம் ஒன்றின் ஊழியர்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
படுகாயமடைந்த மூன்று பெண்களின் நிலைமை கவலைக்கிடமாகவுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. விபத்து நடந்த நேரத்தில் ஜீப்பில் 13 பேர் பயணித்தனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

(ஒ,4)

## மகேந்திரனின் இறுதிச்சடங்கில் சுகாதார வழிகாட்டல்கள் மீறல்

### விசாரணை ஆரம்பம்

கொழும்பு, ஜூலை 30
கப்பிட்டல் மகாராஜா குழுமத்தின் முன்னாள் தலைவர் ராஜேந்திர ராஜமகேந்திரனரின் இறுதிச்சடங்கின் போது, சுகாதார வழிகாட்டல்கள் மீறப்பட்டுள்ளன என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.
இது தொடர்பில் கொழும்பு நகர சுகாதாரப் பிரிவு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.
சுகாதார அமைச்சின் வேண்டுகோளில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
அவரது இறுதிச் சடங்கில் ஏராளமான மக்கள் கலந்து கொண்டனர். இது தொடர்பில் கடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச மற்றும் அமைச்சர்களும் தங்கள் கருத்துக்களைத் தெரிவித்திருந்தனர்.
இறுதிச் சடங்குகள் சட்ட கட்டமைப்புக்கு அப்பாற்பட்டு நடந்துள்ளமையால், விசாரணைகளை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு சுகாதார அமைச்சருக்கு, ஜனாதிபதி பணித்துள்ளார்.
சுகாதார வழிகாட்டுதல்களை மீறி, அதிகப்படியானவர்களின் பங்கபற்றலுடன் இறுதிச்சடங்கு நடத்தப்பட்டுள்ளமை தொடர்பில் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. இது தொடர்பில் விரைவான விசாரணை நடத்த சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்துக்கு அறிவுறுத்தியுள்ளேன் என்று சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்துள்ளார்.
அதற்கமைவாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், கொழும்பு நகர சபை தலைமை மருத்துவ அதிகாரி மருத்துவர் ருவன் விஜெமுனியிடமிருந்து இது தொடர்பில் அறிக்கை கோரியுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ,4,சி)

## நாட்டின் பணப்புழக்கம் உன்னிப்பாக கவனிப்பு



கொழும்பு, ஜூலை 30
அனுபவம் வாய்ந்த நிதி மேலாளர்கள், நாட்டின் இருப்பு மட்டத்தில் தற்காலிக நிதி ஏற்ற இறக்கங்களை நன்கு அறிந்துள்ளனர். அத்துடன் பணப்புழக்கத்தையும் உன்னிப்பாகக் கவனித்துக்கொண்டிருக்கின்றனர். பணப்புழக்கத்தை வெற்றிகரமாக நிர்வகிப்பதன் மூலம், ஸ்திரமின்மையைத் தடுக்க முடியும் என்பதை அவர்கள் நன்கு அறிவார்கள் என்று நிதி மற்றும் மூலதன சந்தைகள் மற்றும் பொது நிறுவன சீர்திருத்தங்கள் துறை இராஜாங்க அமைச்சர் அஜித் நிவார்ட் கப்ரால் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
சர்வதேச இறையாண்மை பத்திரங்களுக்கான 1 பில்லியன் அமெரிக்க டொலர் கடனை அரசு மீளச் செலுத்தியுள்ளது.
இதனையடுத்து தற்போதைய அந்நியச் செலாவணி இருப்பு 3 பில்லியன் அமெரிக்க டொலராகும். மேலும் எதிர்பார்க்கப்படும் வரத்து மற்றும் வெளிச் செல்லல்களைக் கருத்தில் கொண்டு, நாட்டின் அந்நியச் செலாவணி இருப்பு எதிர்வரும் மாதங்களில் 7 பில்லியன் அமெரிக்க டொலரைத் தாண்டும்.
**இலங்கையின் அந்நியச் செலாவணி இருப்பு குறித்து எதிர்மறையான கருத்துக்களை வெளிப்படுத்துவதன் மூலம், எதிர்க்கட்சிகள் ஒரு நிலையற்ற சூழ்நிலையை இங்கு உருவாக்க முயற்சிக்கின்றன - என்றார்.** (ஒ,4)

## ரூ.12 மில்லியன் பணம் மோசடி

### சந்தேகநபர் கைது



கொழும்பு,ஜூலை 30
12 மில்லியன் ரூபா பணத்தை மோசடி செய்தார் என்ற குற்றச்சாட்டில், குற்றத் தடுப்பு அதிகாரிகளால் சந்தேகநபர் ஒருவர் களனியில் கைது செய்யப்பட்டுள்ளார்.
இராஜாங்க அமைச்சர் ஒருவரின் ஒருங்கிணைப்பு செயலாளர் என்று தன்னை அடையாளப்படுத்தி அவர் மோசடியில் ஈடுபட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
குறித்த சந்தேக நபர் சுமார் ஆறு மாதங்களுக்கு முன்னர் வெளிநாட்டிலிருந்து வாகனத்தை இறக்குமதி செய்து தருகின்றேன் என்று கூறி, பதுளைப் பகுதியைச் சேர்ந்த ஒருவரிடமிருந்து பணம் பெற்றுள்ளார்.
வாகனம் வழங்குவதில் ஏற்பட்ட தாமதம் தொடர்பில் பாதிக்கப்பட்ட நபர், கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவுக்கு அளித்த முறைப்பாட்டுக்கு அமைவாக சந்தேகநபர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.
போலி அடையாள அட்டை மற்றும் ஆவணங்களைக் காண்பித்து அவர் மோசடியில் ஈடுபட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஒ,4)



## ஆயிரத்து 100 பேருக்கு மதிய உணவுப் பாசல்

பருத்தித்துறை, ஜூலை 30
கொரோனாத் தொற்றுக் காரணமாக முடக்கப்பட்ட பருத்தித்துறை நகரில் உள்ள ஆயிரத்து 100 பேருக்கு மதிய உணவுப் பாசல் வழங்கப்பட்டது.
**பருத்தித்துறை இராணுவமுகாம் மற்றும் கற்கோவளம் இராணுவ முகாம் ஆகியவற்றைச் சேர்ந்த இராணுவத்தினர் சுகாதார பிரிவினருடன் இணைந்து இந்த உணவுப் பாசல்களை வழங்கினர்.** (ஐ-26)

# இலங்கையின் அபிவிருத்திக்கு 15 டிரில்லியன் ரூபா முதலீடு

## புலம்பெயர் தமிழர்கள் தயார்

கொழும்பு, ஜூலை 30
இலங்கையின் அபிவிருத்திப் பணிகளுக்காக 15 டிரில்லியன் ரூபாவை முதலீடுசெய்ய, தமிழ் புலம்பெயர் மக்கள் தயாராக உள்ளனர் என்று அதன் உறுப்பினர் நிமலன் விஸ்வநாதன் தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை அரசு அனுமதித்தால் ஐரோப்பாவிலும், மேற்கிலும் உள்ள 3 மில்லியன் தமிழர்கள் இலங்கையில் முதலீடு செய்யத் தயாராக உள்ளனர்.
இலங்கையில் தற்போதைய அந்நியச் செலாவணி நெருக்கடியை சமாளிக்கவும், அதன் வெளிநாட்டு இருப்புக்களை அதிகரிக்கவும் புலம்பெயர்ந்தோர் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.
அடுத்த மூன்று ஆண்டுகளில், இலங்கையை விரைவான வளர்ச்சியை நோக்கி நகர்த்துவதற்கான பல தள அடிப்படையிலான திட்டங்களை அரசுக்கு முன்வைக்கலாம் என்று நம்புகின்றோம்.
ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச

நாட்டை அபிவிருத்திசெய்ய விரும்பினாலும், அவரது அமைச்சரவையில் உள்ளவர்கள் அதில் அக்கறை இல்லை என்பதை அவரது நடத்தை காட்டுகின்றது.
இத்தகைய பின்னணியில், இலங்கைக்கு அந்நிய முதலீட்டை ஈர்ப்பதில் சிக்கல் உள்ளது - என்றார். (ஒ,4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொரோனாத் தடுப்பூசி ஒருவருக்கு 3 டோஸ்கள்

## அடுத்த ஆண்டு திட்டம்




**கொழும்பு, ஜுலை 30**

**கொரோனாத் தொற்றுக்கான தடுப்பூசியின் இரண்டு டோஸ்களையும் பெற்றுக்கொண்டவர்களுக்கு, தேவை ஏற்படின் மூன்றாம் டோஸையும், அடுத்த ஆண்டு ஜனவரி தொடக்கம் ஏற்றுவதற்கு நடவடிக் கைகள் முன்னெடுக்கப்படும் என்று பிரதி சுகாதாரப் பணிப்பாளர் மருத்துவர் ஹேமந்த ஹேரத் தெரிவித் துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், தடுப்பூசியின் இரண்டு டோஸ்களை ஏற்றிக்கொண்டவர்களுக்கு துணைத் தடுப்பூசியாக மூன்றாம் டோஸ் செலுத்துவது தொடர்பில் ஆராயப்படுகின்றது.

தடுப்பூசியை ஏற்றிக்கொண்டவர்கள் மிகக் கவனமாக தமது பாதுகாப்பை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். இரண்டு டோஸ்களை ஏற்றிக்கொண்டுவிட்டோம் என்பதற்காக கொரோனா தொற்றாது என்று அர்த்தப்படாது. இரண்டு டோஸ்களை ஏற்றிக்கொண்டவர்களுக்கும் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.


தடுப்பூசியை ஏற்றிக்கொள்வதால் உடலில் நோயெதிர்ப்பு சக்தி கூடுவதுடன், ஒருவரிலிருந்து இன்னொருவருக்கு வைரஸ் தொற்றும் வீதமும் குறைவடையும் என்பதே இதன் பிரதான காரணியாகும். எனவே தடுப்பூசிகள் ஏற்றிக்கொண்டால் வைரஸ் தொற்றாது என்ற நிலைப்பாட்டுக்கு எவரும் வரக்கூடாது. விரைவாக சகலரும் தடுப்பூசிகளை ஏற்றிக்கொள்வதுடன், சுகாதார வழிமுறைகளை பின்பற்றிச் செயற்பட வேண்டும்.

இரண்டு டோஸ்களை ஏற்றிக் கொண்டவர்களின் நோயெதிர்ப்பு செயற்பாடுகள் எவ்வாறானவை என்பதை ஆய்வுசெய்து வருகின்றோம். இவர்களுக்கு எதிர்காலத்தில் துணைத் தடுப்பூசியாக மூன்றாம் டோஸ் ஏற்ற வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டால் அதனை அடுத்த ஆண்டு ஜனவரி தொடக்கம் முன்னெடுக்க நடவடிக்கை எடுக்கப்படும். ஆலோசனைக் குழுவில் இது குறித்து அறிவுறுத்தல்கள் விடப்படும்.

அதேவேளை நாட்டில் ஒட்சிசன் தட்டுப்பாடு நிலவுகின்றது என்று கூறுகின்றபோதிலும் அவ்வாறான தட்டுப்பாடு இல்லை. இந்தியாவைப் போன்று பாரதூரமான நிலையொன்றை நாம் இன்னமும் அடையவில்லை. நோயாளர்களுக்கு தேவையான ஒட்சிசன் எம்மிடம் உள்ளது. மேலதிகமாகவும் உள்ளது. ஆகவே இது குறித்து அச்சம் கொள்ளத் தேவையில்லை.

டெல்டா வைரஸ் தொற்றாளர்களுக்கே அதிகளவில் ஒட்சிசன் தேவைப்படுகின்றது. வழமையான தொற்றாளர்களுக்கு பயன்படும் ஒட்சிசனை விடவும் அதிகளவில் டெல்டா வைரஸ் தொற்றாளர்களுக்கு தேவைப்படுகின்ற காரணத்தால் இந்த அச்சுறுத்தல் நிலை குறித்து சிலர் கூறலாம். ஆனால் இப்போது அவ்வாறான அச்சுறுத்தல் நிலை இல்லை என்பதை நாம் உறுதிப்படுத்துகின்றோம்.

எனினும் நாட்டில் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே செல்கின்றது. கடந்த ஒரு வாரத்தில் 10 வீதத்தால் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பை தரவுகள் காட்டுகின்றன? என்றார். (ஒ.4)




## தீவகம் கிராம அலுவலர் பிரிவுகளில் தடுப்பூசி போடப்படும் இடங்கள்

யாழ்ப்பாணம், ஜுலை 30

தீவகம் தெற்கு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பகுதியில் கொவிட்-19 தடுப்பூசி ஏற்றும் இடங்கள் பற்றிய விவரங்களை பிரதேச சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவினர் அறிவித்துள்ளனர்.

அதன்படி, எதிர்வரும் 30ஆம் தொடக்கம் வேலணை பிரதேச செயலக (தீவகம் தெற்கு) பிரிவுக்குட்பட்ட கிராம அலுவலர் பிரிவுகளுக்குள் வசிக்கும் பொது மக்களுக்கு முதற்கட்ட தடுப்பூசி வழங்குவ தற்கான ஏற்பாடுகளை வேலணை பிரதேச சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையினர் முன்னெடுத் துள்ளனர்.

அதன்படி, நா . ா வெள்ளிக்கிழமை, புங்குடுதீவு சுப்பிரமணிய வித்தியாலயம்

31/07/2021
புங்குடுதீவு கணேசா வித்தியாலயம்.
கிராமசேவையாளர் பிரிவுகள் J/23,J/24,J/25,J/26, J/31.

02/08/2021
வேலணை சரஸ்வதி வித்தியாலயம்.
கிராமசேவையாளர் பிரிவுகள் J/12,J/13,J/14,J/17,J/18.

03/08/2021
வேலணை சரஸ்வதி வித்தியாலயம்.
கிராமசேவையாளர் பிரிவுகள் J/15,J/16,J/19,J/20,J/21.

04/08/2021
அல்லைப்பிட்டி றோமன் கத்தோலிக்க அரசினர் தமிழ் கலவன் பாடசாலை
கிராமசேவையாளர் பிரிவு J/10.

05/08/2021
மண்கும்பான் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை
கிராமசேவையாளர் பிரிவு J/11.

06/08/2021
மண்டதீவு மகா வித்தியாலயம்
கிராமசேவையாளர் பிரிவுகள் J/07,J/08,J/09.
இரண்டாவது தடவை ஊசி ஏற்றபடவேண்டியவர்கள்.

07/08/2021
புங்குடுதீவு கணேசா வித்தியாலயம். கிராமசேவையாளர் பிரிவுகள் J/23,J/24,J/25,J/26 .J/31 ஆகிய இடங்களில் ஊசி ஏற்றப்படவுள்ளது. (து)

## முதலீடுகளை ஊக்குவிக்க விசேட கலந்துரையாடல்

கொழும்பு, ஜுலை 30

தேசிய மட்டத்தில் முக்கியத்துவம் வாய்ந்த துறைகளுக்கு தேவையான முதலீடுகளை இனங்காணல் மற்றும் முதலீடுகளை ஊக்குவித்தல் தொடர்பான விசேட கலந்துரையாடல் நிதியமைச்சில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

நிதியமைச்சர் பஸில் ராஜபக்ச தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் மீன்பிடி மற்றும் மருந்து உற்பத்தி ஆகிய துறைகளில் அதிக முதலீடுகளை ஈர்க்கும் துறைகளை இனங்கண்டு, அவற்றுக்கான வசதிகளை, ஏற்படுத்திக்கொடுப்பது தொடர்பாக அவதானம் செலுத்தப்பட்டது.

அத்துடன் திட்டங்களைச் செயற்படுத்திக்கொள்வதற்கு உரிய அரச நிறுவனங்களுக்கிடையில் ஒன்றிணைந்த தொடர்பு பேணல் நிலைமை தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது. கலந்துரையாடலில் நிதி மூலதனச் சந்தை இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால், நிதியமைச்சின் செயலாளர் எஸ். ஆர் ஆடிகல மற்றும் முதலீட்டுத் துறையுடன் தொடர்புடைய பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். (ஒ.4)

## ஆபாசக் காணொலிகள் இணையத்தில் வெளியீடு

### கைதுசெய்ய நடவடிக்கை

கொழும்பு, ஜுலை 30

சிறுவர்களின் ஆபாச காணொலிகள் மற்றும் புகைப்படங்களை இணையத்தில் வெளியிடுவோரைக் கைது செய்வதற்கான சிறப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

குற்றப் புலனாய்வுப் பிரிவினர், பொலிஸ் சிறுவர் மற்றும் பெண்கள் பணியகப் பிரிவினர் இது தொடர்பில் சிறப்புத் தரவுகளின் மூலம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். ஜுன் மாதம் 17 ஆம் திகதி தொடக்கம் ஜுலை மாதம் 28 ஆம் திகதி வரை 17 ஆயிரத்து 629 சிறுவர்களின் ஆபாசக் காணொலிகள் மற்றும் புகைப்படங்கள் இணையத்தில் பதிவேற்றப்பட்டுள்ளன.

இவற்றுடன் சம்பந்தப்பட்ட சந்தேக நபர்கள் அடையாளம் காணப் பட்டுள்ளனர்.

அவர்களைக் கைதுசெய்வதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப் பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஒ.4)



## கற்றல் விருத்திக்கான கையேடு வழங்கல்

போக்கட்டி அ.த.க பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் விருத்திக் கையேடு வழங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் புதன்கிழமை அதிபர் தி.அபராஜிதன் தலைமையில் நடைபெற்றது.

கொக்குவில் இந்துக்கல்லூரியின் 1996 ஆம் ஆண்டு க.பொ.த.சாதாரண மற்றும் 1999 க.பொ.த.உயர்தர மாணவர் அணியினரால் தயாரிக்கப்பட்ட தரம் 2 தொடக்கம் 5 வரையான வகுப்புகளுக்கான கையேடே இவ்வாறு வழங்கப்பட்டது. (ஐ-159)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# இன்றைய நாள்

**மேடம்:** சாப்பிடவும், தூங்கவும் நேர மின்றி உழைக்க வேண்டி வரும். பிரி யமானவர்களோடு ஏற்பட்ட பிரச்னைகள் மறையும். எதிர்பார்த்தது நடக்காததால் விரக்தி ஏற்பட வாய்ப்புண்டு. உடல் நலனில் அக்கறை தேவை.

**இடபம்:** எதைத் தொட்டாலும் பிரச் சினையில் முடிகிறதே என புலம்பு வீர்கள். குடும்பத்தினர் ஒத்துழைப்பர். பணத் தேவை பூர்த்தியாகும். பிள்ளை களால் நன்மை ஏற்படும்.

**மிதுனம்:** உறவினர் வீட்டு சுப நிகழ்ச்சி பற்றிய தகவல் வரும். மற்றவர்கள் பிரச்னையில் தலையிட்டு அதைச் சரிசெய்வீர்கள். குடும்பத்தில் நிகழும் குதூகல சம்பவங்கள் மகிழ்ச்சி தரும்.

**கடகம்:** நீண்ட நாளைய எண்ணம் ஒன்று நிறைவேறும். நீதி கிடைக்காது என்று நினைத்த விஷயத்தில் நல்ல முடிவு ஏற்படும். உயர்ந்த நிலையை அடைய சந்தர்ப்பம் கைகூடிவரும்.

**சிம்மம்:** மாற்றுக் கருத்துடையோர் மனம் மாறி சமாதானத்துக்கு வருவர். உடல் நலக்குறைவு வந்து சரியாகும். கவலை கள் மறையும். அலைச்சல் ஏற்பட்டாலும் ஆதாயம் கிடைக்கும். வீண் பயம் நீங்கும்.

**கன்னி:** சான்றோர்களின் எதிர்பாராத சந்திப்பால் சந்தோஷம் அடைவீர்கள். திட்டமிட்ட விஷயம் ஒன்றில் திடீர் மாற்றங்களைச் சந்திப்பீர்கள். கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டு மறையும்.

**துலாம்:** தேவையற்ற வாக்குவா தங்களில் மூக்கை நுழைக்காதீர்கள். பொது வாழ்வில் புகழ் கூடும். குடும்பத் தில் மகிழ்ச்சி நிலவும். நல்ல செய்தி வரும்.

**விருச்சிகம்:** நண்பர்களிடம் விட்டுக் கொடுத்து போவதால் மகிழ்ச்சி ஏற்படும். மற்றவர்களால் பாராட்டப் பெறுவீர்கள். பொறாமையை கைவிடுங்கள். விமர்ச னத்தைப் புறந்தள்ளி முன்னேறுவீர்கள்.

**தனுசு:** கரைந்த சேமிப்பை ஈடுகட்டு வீர்கள். கட்டிடப்பணி தொடரும். முன் றேற வேண்டும் என பாடுபடுவீர்கள். நிதி நிலை உயரும். கோபம் குறை யும்.

**மகரம்:** எதிரிகளாக இருந்தவர்கள் திடீ ரென்று நண்பர்களாக மாறுவர். வழி பாட்டால் வளர்ச்சி காண்பீர்கள். மன தைரியம் கூடும். ஆரோக்கியம் சீராகும். பயமுறுத்தியவர்கள் விலகிச் செல்வர்.

**கும்பம்:** திட்டமிட்ட விஷயம் நடக்காது. திட்டமிடாத நன்மை நிகழும். மாற்று கருத்துடையோர் மனம் மாறி இணக்க மாவர். உடல்நலம் கூடும்.

**மீனம்:** வெளிநாட்டிலிருந்து எதிர்பார்த்தி ருந்த நல்ல தகவல் வரும். விட்டுப் போன வரன்கள் மீண்டும் வந்து நல்லபடியாக முடியும். தொழில் வளர்ச்சி உண்டாகும்.

# ஓடிடியில் வெளியாகும் சூர்யாவின் 'ஜெய் பீம்'





'கூட்டத்தில் ஒருத்தன்' படத்தை இயக்கிய டி.ஜே ஞானவேல் இயக்கத்தில் சூர்யா தனது 39ஆவது படத்தில் நடித்துள்ளார். இந்தப் படத்துக்கு 'ஜெய் பீம்' என்று தலைப்பு வைக்கப்பட்டுள்ளது.

இந்தப் படத்தின் போஸ்டர்களில் சூர்யா வழக்கறிஞர் உடையில் காணப்படுகிறார். மேலும் பழங்குடியின மக்களும் போஸ்ட ரில் இடம் பெற்றுள்ளனர்.

உண்மைச் சம்பவங்களை தழுவி எடுக்கப் பட்டுள்ள இந்த படத்தில் சூர்யா இருளர் பழங்குடி இனமக்களின் வாழ்வுரிமைக்காக போராடும் வழக்கறிஞராக நடித்துள்ளார். இந்த நிலையில் படத்தை ஓடிடியில் வெளி யிட படக்குழு திட்டமிட்டு வருகிறது எனக் கூறப்படுகிறது.




# பொறுமை சுவையானது!



1. ஓர் இலக்கை நோக்கி பயணிக்கையில், 'நாளைக்கே வெற்றி' என்று உடனடியாக சாத்தியப்படுவ தில்லை வெற்றி.
2. பொறுமை கசப்பானதுதான். இருந்தும், நம் காத் திருப்புக்கு இனிமையான கனிகளை எமக்கு தர மறுப்பதில்லை.
3. நம்முடைய பொறுமை, நம்பிக்கை இழக்கப்படும் போது, பொன் முட்டையிடும் வாத்தை வெட்டி முட்டை தேடிய முட்டாள் போல் செயற்பட தொடங்கி விடுவோம்.
4. பொறுமை தனது பயணத்தை நிறுத்திவிடும்போது, தோல்வி எம்மை ஆரத்தழுவி அணைத்துக் கொண்டுவிடும்.
5. பொறுமை உயரமான வெற்றிகளை உருவாக்குகி றது. அவசரப்பட்டு சடசடவென வளர்ந்து முறிந்து விழாமல், எம் அடித்தளத்தை வலுவாக்கிக்கொள்ள பொறுமை எம்மை தூண்டுகின்றது.
6. அவசரம் எமக்கு சிப்பிகளைத் தரலாம். ஆனால், பொறுமையே முத்துக்களை தரமுடியும்.
7. ஒருவனின் திறமைகளை வெற்றிகளாக உருமாற் றுவது முத்து போன்ற பொறுமையே!
8. பொறுமை அனுபவத்தின் வெளிப்பாடு. அதுவே வாழ்வின் அலைகளை எதிர்கொள்ளும் துடுப்பு களாய் அமையும்.




மௌனவரி @mounam_twitz

வாழ்க்கை ஒன்றும் அத்தனை கஷ்டமில்லை. சிலநேரம் ஏற்றுக் கொள்ளவும் பலநேரம் தேற்றிக் கொள்ளவும் கற்றுக் கொண்டாலே போதும்.

நீ முதலில் நேர்மையாக இருக்கவேண்டியது உன் மனசாட்சிக்கு மட்டும்தான்

தனிஒருவன் @anandh_twitzs

ஏமாற்றபடுகிறோம் என்று தெரிந்தே ஏமாறுவதும் ஒரு வகை அன்பு தான்...!!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# வெள்ளத்தில் சிக்கி 192 பேர் உயிரிழப்பு

புதுடில்லி, ஜூலை 30

மகாராஷ்டிரா மாநிலத்தில் பெய்து வரும் கனமழையால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 192 ஆக அதிகரித்துள்ளது. இந்த மாநிலத்தில் கடந்த இரண்டு வார காலமாக தொடர்ச்சியாக மழை பெய்து வருகின்றது. அதனால் பல உள்கட்டமைப்பு வசதிகள் பாதிக்கப்பட்டுள்ளன.

ராய்காட், ரத்னகிரி, சிந்துதுர்க், கோலாப்பூர், சாங்கிலி உள்ளிட்ட கிராமங்களில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. மக்களின் இயல்பு வாழ்க்கை முற்றாக ஸ்தம்பிதம் அடைந்துள்ளது.

இந்த வெள்ளப்பெருக்கில் சிக்கி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 192 ஆக அதிகரித்துள்ளது என்று அந்த மாநில அரசு அறிவித்துள்ளது. அத்துடன் 2 இலட்சத்து 29 ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் பாதுகாப்பான இடங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக முதலமைச்சர் உத்தவ் தாக்கரே உயர் அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தி வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

நிவர்ரண பணிகள் போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ள வேண்டும் எனவும், நிலச்சரிவால் பாதிக்கப்பட்ட கிராமங்களில் மிக விரைவாக நிவாரண பணிகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் முதலமைச்சர் அறிவுறுத்தியுள்ளார். (ஏ-இ)

# பூதாகரமாகின்றது பெகாசஸ் எதிர்க்கட்சிகள் போர்க்கொடி

**புதுடில்லி, ஜூலை 30**

**பெகாசஸ் உளவு விவகாரம் குறித்து நாடாளுமன்றத்தில் பிரதமர் அல்லது மத்திய உள்துறை அமைச்சர் முன்னிலையில் விவாதம் நடத்தப்பட வேண்டும் என ராகுல் காந்தி வலியுறுத்தியுள்ளார்.**

பெகாசஸ் உளவு விவகாரத்தில், நாடாளுமன்றத்தை செயற்பட விடாமல் எதிர்கட்சிகள் தடுக்கின்றன என்று பிரதமர் நரேந்திர மோடி குற்றஞ்சாட்டிய நிலையில், அதற்கு எதிர்ப்பு தெரிவித்து ராகுல் காந்தி கருத்து தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

எதிர்கட்சிகள் நாடாளுமன்ற நடவடிக்கைகளை சீர்குலைக்கவில்லை. தங்கள் கடமையைத்தான் செய்கின்றன. பெகாசஸ் உளவு விவகாரம், எங்களை பொறுத்தவரை தேசியம், தேச துரோகம், சம்பந்தப்பட்ட பிரச்சினை ஆகும். இது தனியுரிமை தொடர்புடையது.

நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சிகளின் குரல் நசுக்கப்படுகிறது. பெகாசஸ் மென்பொருளை வாங்கினீர்களா? இந்தியர்களை உளவு பார்த்தீர்களா? என்றுதான் கேட்கிறோம். இந்த பிரச்சினையில் இந்திய ஜனநாயகத்தின் ஆன்மா மீது பிரதமரும், மத்திய உள்துறை அமைச்சரும் தாக்குதல் நடத்தியுள்ளனர். பெகாசஸ் உளவு பிரச்சினை குறித்து நாடாளுமன்றத்தில் பிரதமர் அல்லது உள்துறை அமைச்சர் முன்னணியில் விவாதம் நடத்த வேண்டும்- என்றார். (ஏ-இ)

# ஜீன்ஸ் அணிந்ததால் 17 வயது பெண் கொலை

புதுடில்லி, ஜூலை 30

ஜீன்ஸ் அணிந்ததால் 17 வயதான பெண்ணொருவர் அவரது குடும்பத்தினரால் அடித்துக் கொல்லப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் இந்தியாவின் உத்தர பிரதேசத்தில் நடந்துள்ளது. நேஹா பாஸ்வான் என்ற 17 வயது பெண்ணே கொல்லப்பட்டுள்ளார்.

நேபாள எல்லைக்கு அருகிலுள்ள தியோரியா மாவட்டத்தில் சாவ்ரேஜி கார்க் கிராமத்தில் நேஹா வசிக்கிறார். அவர் ஜீன்ஸ் அணிவதை விரும்புகிறார். எனினும், அவரது குடும்பத்தினர் அதை விரும்பவில்லை. நேஹா ஜீன்ஸ் அணிவதை விரும்பாத தாத்தா மற்றும் மாமாக்கள் தடிகளால் அவரை தாக்கியுள்ளனர்.

பெண்ணின் தாயார் சகுந்தலா தேவி பாஸ்வான், ஒரு மத சடங்கு செய்யும்போது நேஹா வீட்டில் ஜீன்ஸ் அணிந்திருந்ததை தொடர்ந்து சச்சரவு தொர்டங்கியது என்று கூறியுள்ளார். ஜீன்ஸ், ரொப்பை கழற்றி, பாரம்பரிய ஆடை அணிந்த படி சடங்கில் ஈடுபடும்படி தாத்தா, பாட்டி கூறியபோது, நேஹா மறுத்தார் என்றும் அதையடுத்து அவர் தாக்கப்பட்டார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. இந்த தாக்குதலில் ஈடுபடாத ஏனைய குடும்ப உறுப்பினர்கள், ஒரு ரிக்ஷாவை அழைத்து, மயக்கமடைந்த நேஹாவை மருத்துவமனைக்கு அழைத்துச் செல்ல முயன்றனர். ஆனால் அதற்கு முன்னரே நேஹா இறந்துவிட்டார் என்று கூறப்படுகின்றது. மருத்துமனைக்குக் கொண்டுசெல்லப்பட்ட நேஹா காணாமல் போயிருந்த நிலையில், கந்தக் ஆற்றின் மேல் உள்ள பாலத்தில் நேஹாவின் உடல் தூக்கில் தொங்கிய நிலையில் காணப்பட்டார்.

தற்போது நேஹாவின் குடும்பத்தினர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். நேஹாவின் தாத்தா, பாட்டி, மாமாக்கள், உறவினர்கள் மற்றும் ரிக்ஷா டிரைவர் உள்ளிட்டவர்கள்மீது கொலை மற்றும் ஆதாரங்களை அழித்த குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது. (ஏ-இ)




# எல்லைக்கு விமானங்களை நகர்த்திய இந்தியா

புதுடில்லி, ஜூலை 30

சீனாவுடனான கிழக்கு எல்லையில் ரஃபேல் போர் விமானங்களை இந்தியா நிறுத்தியுள்ளது.

எல்லைப் பகுதியில் அவ்வப்போது பதற்ற நிலைமை நீடித்துவரும் நிலையில், படைவிலக்கல் நடவடிக்கையும் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. அதேநேரம் எதிர்வரும் சனிக்கிழமை இரு நாட்டு உயர் இராணுவ அதிகாரிகள் அளவிலான பேச்சுவார்த்தை நடைபெறவுள்ளது என்று அறிவிக்கப்பட்டிருக்கும் நிலையில், இந்தியா போர் விமானங்களை எல்லைக்கு நகர்த்தியுள்ளது. (ஏ-இ)

# இந்தியா வந்த பிளிங்கன் பல தரப்புகளுடன் பேச்சு!

புதுடில்லி, ஜூலை 30

இந்தியாவுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் அன்டனி பிளிங்கன் இந்தியப் பிரதமர் மோடி மற்றும் இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் ஆகியோரை சந்தித்து பேச்சு நடத்தவுள்ளார்.

அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் அன்டனி பிளிங்கன், இரு நாள்கள் பயணமாக நேற்று முன்தினம் இரவு இந்தியாவின் தலைநகர் புதுடில்லியைச் சென்றடைந்தார். அன்டனி பிளிங்கன் அமெரிக்காவின் வெளிவிவகார அமைச்சராக பதவியேற்றதன் பின்னர் இந்தியாவுக்கு பயணம் மேற்கொள்வது இதுவே முதல் முறையாகும்.

இந்திய மத்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல் ஆகியோருடன் அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் அன்டனி பிளிங்கன் பேச்சு நடத்துவார். அதைத் தொடர்ந்து இந்திய பிரதமர் மோடியையும் அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் அன்டனி பிளிங்கன் சந்திக்கவுள்ளார். ஆப்கானிஸ்தான் நிலவரம், குவாட் அமைப்பை வலுப்படுத்துதல், பாதுகாப்பு, வர்த்தக உறவை பலப்படுத்துதல் ஆகியவை குறித்து இந்தப் பேச்சுகளின் போது ஆலோசிக்கப்படும் என்று இந்தியத் தரப்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, இந்தோ - பசுபிக் பிராந்திய நாடுகளுக்கு போதுமானளவு கொவிட் தடுப்பூசி உற்பத்திக்கான மூலப்பொருள்களை தொடர்ந்து விநியோகிப்பது தொடர்பாகவும் பேசப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ஏ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிரிழந்தவர்களை மீண்டும் படுகொலைசெய்கிறது அரசு

## வடமாகாண சபை முன்னாள் உறுப்பினர் சபா குகதாஸ் தெரிவிப்பு

**மன்னார், ஜுலை 30**
**உயிரிழந்தவர்களை மீண்டும் படுகொலை செய்கிறது கோத்தாபய அரசாங்கம் என்று வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் சபா குகதாஸ் தெரிவித்துள்ளார்.**



அவர் மேலும் தெரிவிக்கையில்,
மனித நாகரிகம் வெட்கித் தலை குனியும் அளவிற்கு இலங்கை அரசின் ஆசீர்வாதத்துடன் 1983 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 23 திகதியில் இருந்து 27 ஆம் திகதி வரை நான்காயிரத்துக்கு அதிக மான அப்பாவித் தமிழர்கள் படு கொலை செய்யப்பட்டனர்.
வெலிக்கடை சிறையில் பயங்கர வாத தடைச் சட்டத்தில் கைதுசெய் யப்பட்டு தடுத்து வைக்கப்பட்ட விடுதலைப் போராளிகள் உள் ளிட்ட 53 பேர் வெட்டியும் கொத்தி யும் படுகொலைசெய்யப்பட்டு கைதிகளின் உடல் உறுப் புக்கள் புத்தபிரானுக்கு படைக்கப்பட்டன. கைதிக ளின் குருதியை காடையர் கள் குடித்து கூத்தாடினர். இதனை கறுப்பு ஜுலை படுகொலை என்ற பெயரில் 37 ஆண்டுகளாக சுவர் ஒட்டிகள் ஒட்டி தமிழர் தாயகம் எங் கும் நினைவேந்தப்பட்டு வருகின் றது. இம்முறை 38 ஆண்டு நினைவேந்தலுக்கான சுவர் ஒட்டி கள் ஒட்டப்படும் போது தற்போ தைய கோத்தாபய அரசு இரா ணுவ இயந்திரத்தை தூண்டி சுவர் ஒட்டிகளை கிழித்தும், கழிவு ஒயில் கொண்டு மறைத்தும் அடாவடி யில் ஈடுபட்டுள்ளனர்.
இத்தகைய செயற்பாடுகள் அதிகா ரப்போக்குடன் உயிரிழந்தவர் களை மீண்டும் படுகொலை செய் கின்ற கொடூரமான பாசிச நடவ டிக்கையாகும். பாதிக்கப்பட்ட மக்க ளுக்கு நீதி கிடைக்காதபோதும் அவர்களை நினைவேந்தல் செய் யக்கூட தடுத்தல் அப்பட்டமான மனிதவுரிமை மீறலாகும்- என் றார். (ஐ-213)

# போதைப்பொருள் வியாபாரி வாழைச்சேனையில் கைது

மட்டக்களப்பு, ஜுலை 30
ஓட்டமாவடி எஸ்.எம்.ரீ.ஹாஜியார் வீதியில் 41 வயது டைய பிரபல போதைப்பொருள் வியாபாரி ஒருவர் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு கைதுசெய்யப்பட்டுள் ளார் என்று வாழைச்சேனை பொலிஸார் தெரிவித் தனர்.
வாழைச்சேனை காகித ஆலை இராணுவப் புலனாய் வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசியத் தகவலுக்க மைய புலனாய்வுப் பிரிவினரும் வாழைச்சேனை பொலிஸாரும் இணைந்து மேற்கொண்ட சுற்றி வளைப்பின்போதே மேற்படி சந்தேகநபர் கைதுசெய் யப்பட்டுள்ளார். இவரிடம் இருந்து 4 கிராம் ஹெரோய்ன் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள் ளது. இவருடன் தொடர்புடையவர்கள் தொடர்பான விசாரணை களை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ப-150)

# அரங்க கதையாடல் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜுலை 30
புத்தாக்க அரங்க இயக்கம் வழங்கும் "அரங்க கதையாடல் நிகழ்வு" ( அகில இலங்கை ரீதியில் நடத் தப்பட்ட இணையவழி குறுநாடக பிரதியாக்கப் போட்டிக் கான நிலையறிவித்தல் ) எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை மாலை 7 மணிக்கு புத்தாக்க அரங்க இயக்கத்தின் நிர் வாகப் பணிப்பாளர் எஸ்.ரி.அருள்குமரன் தலைமையில் நடைபெறவுள்ளது.
இந்த நிகழ்வில் வாழ்த்துரையை யாழ்ப்பாணப் பல்க லைக்கழக கல்வியற்துறை விரிவுரையாளர் யாழ்ப்பாண தமிழ்ச் சங்கச் செயலாளர் இ.சர்வேஸ்வரா , கதையாடல் நிகழ்வை புத்தாக்க அரங்க இயக்கத்தின் நிர்வாகப் பணிப்பாளர் எஸ்.ரி.அருள்குமரன், போட்டி நிலையறி வித்தலை ஆற்றுகை இணைப்பாளர் எஸ்.ரி.திஸ்ணு கன், நன்றியுரையை ஆற்றுகை இணைப்பாளர் எஸ். ஆர். சாது ஆகியோர் வழங்கவுள்ளனர். "சூம்" செயலி இலக்கம் 76319018137, கடவுச்சொல் ITM ஊடாக நாடக போட்டியாளர்களையும் நாடக ஆர்வலர்களையும் இணைந்துகொள்ளுமாறு புத்தாக்க அரங்க இயக்கத்தி னர் அறிவித்துள்ளனர். (ஐ)

# டெங்குத் தொற்று 10,547 பேர் பாதிப்பு

கொழும்பு, ஜுலை 30
இந்த வருடத்தில் இதுவரையான காலப் பகுதியில் டெங்குத் தொற்றால் 10 ஆயிரத்து 547 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 7 பேர் உயி ரிழந்துள்ளனர் என்று சுகாதார அமைச்சின் தொற்று நோய் விஞ்ஞானப் பிரிவு தெரிவித் துள்ளது.
பருவமழை பெய்யும் நிலையில் நுளம்புகளால் பரவும் நோய்க்கான ஆபத்து அதிகமாக உள் ளது. டெங்கு பரவாமல் தடுப்பதில் சிறப்புக் கவனம் செலுத்தப்பட வேண்டும்.
உத்தியோகபூர்வ புள்ளிவிவரங்களின்படி கடந்த வருடம் 30 ஆயிரத்து 802 டெங்குத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்ட னர். சுமார் 30 பேர் உயிரிழந்தனர்.
இந்த வருடத்தில் கொழும்பு, கம்பஹா, களுத் துறை, யாழ்ப்பாணம், கண்டி, காலி, மாத் தளை மற்றும் மட்டக்களப்பு ஆகிய மாவட்டங் கள் அதிகம் ஆபத்துள்ள பகுதிகளாக அடை யாளம் காணப்பட்டுள்ளன.
எனவே திரவ வகைகளைப் பருக முடியாதி ருத்தல் (அடிக்கடி வாந்தயெடுத்தல்), உணவு, பான வகைகளை நிராகரித்தல்,
கடுமையான தாகம், சிறுநீர் கழிக்கும் தடவை கள் குறைவடைதல் ( 6 மணித்தியாலத்துக்கு கூடுதலான நேரத்துக்குள் சிறுநீர் வெளிவ ராமை), கடுமையான வயிற்று வலி, தூக்க நிலைமை, நடத்தையில் மாற்றம் ஏற்படல், சிவப்பு,கறுப்பு, கபில நிறத்தில் வாந்தியெடுத் தல், கறுப்பு நிறத்தில் மலம் வெளியாதல்,
குருதிப்பெருக்கு (முரசுகளிலிருந்து குருதிப் பெருக்கு, சிறுநீர் சிவப்பு நிறத்தில் வெளியா தல்), தலைசுற்றுதல் மற்றும் கை,கால்கள் குளிரடைதல் ஆகிய அறிகுறிகள் காணப்ப டின் நோயாளியை உடனடியாக மருத்துவம னையில் சேர்க்க வேண்டும் என்று மருத்து வர்கள் அறிவுறுத்தியுள்ளனர். (ஒ.4)



# குருதிக்கொடை

நெடுந்தீவு, ஜுலை 30
நெடுந்தீவு பிரதேச மருத்துவமனையில் கியூடெக் கரித் தாஸ் நிறுவனத்தின் சமாதான சமூக மேம்பாட்டு குழு வினராலும், தேசிய இளைஞர் மன்ற இளையோர்க ளாலும் குருதிக்கொடை முகாம் ஒன்று ஏற்பாடு செய் யப்பட்டு இடம்பெற்றது. 32 பேருக்கு மேல் குருதி வழங்கினர் என்று தெரிவிக்கப்பட்டது. (ப)



# எல்லை நிர்ணயத்தில் முஸ்லிம்களுக்கு நியாயமான தீர்வு வழங்கப்பட வேண்டும்

## ஹாபிஸ் நசீர் எம்.பி. தெரிவிப்பு

மட்டக்களப்பு, ஜுலை 30
எல்லை நிர்ணயத்தில் முஸ்லிம்களுக்கு சரியான நியாயமான தீர்வு கிடைக்க வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப் பினர் ஹாபிஸ் நசீர் அஹமட் தெரி வித்தார்.
அரசின் நிர்வாக ரீதியான எல்லை களை மீள் ஒழுங்கமைக்கும் நோக்கத் தின் அடிப்படையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் 14 பிரதேச செயலாளர் பிரிவுகளுக்குமான எல்லைகளை நிர் ணயம் செய்வது தொடர்பான கலந்து ரையாடல் மாவட்டச் செயலகத்தில் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களின் பங்குபற்றலுடன் கடந்த [illegible] எல்லை [illegible] கலந்துரையாடலில் பிரதேச செயலகங் களால் சம்பர்ப்பிக்கப்பட்ட முன்மொழி வுகள் கலந்துரையாடப்பட்டு, ஏற்றுக் கொள்ளக்கூடியவைகள் மாவட்டக் குழுவால் சிபாரிசு செய்யப்பட்டதோடு இன ரீதியான முரண்பாடுகள் நீண்ட காலமாக இருக்கத்தக்கதான கிராம அலுவர் பிரிவுகள், பிரதேச செயலாளர் பிரிவுகள் என்பவை தீர்மானம் எட்டப் பாடாது சில முன்மொழிவுகள் எல்லை நிர்ணய ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிப் பது எனவும் ஏனையவைகள் அந்தந்த பிரதேச செயலகங்களின் உள்ளூராட்சி மன்றங்களின் பிரதிநிதிகள் மற்றும் சமூகமட்ட புத்திஜீவிகள், நாடாளுமன்ற உறுப்பினர்களின் பங்குபற்றலுடன் தீர்மானிக்கப்பட வேண்டும் என்ற அடிப் படையில் ஆரையம்பதி பிரதேச செய லர் பிரிவுக்குட்பட்ட பாலமுனை பிரதேச எல்லை விவகாரம் தொடர்பில் தமிழ், முஸ்லிம் மக்களுக்கிடையில் முரண் பட்ட கருத்து தோன்றியது. இதன் போது இந்த நிகழ்வில் கலந்து கொண்ட மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஹாபிஸ் நசீர் அஹமட் உரையாற்றும் போது இவ் எல்லை நிர் ணயமானது மக்களுக்கு இடையில் நிர்வாக ரீதியாக நிலவும் சிக்கல்களைத் தீர்த்துக்கொள்வதற்காக அமைக்கப்பட் டதே தவிர சிக்கல்களை வைத்துக் கொண்டு மேலும் பல சிக்கல்களை உருவாக்கின்ற தீர்வை நாம் காண முடியாது. இவற்றுக்கு நிரந்தரமான தீர்வை நாம் காண வேண்டும்- என் றார். இதனை அடுத்து மீண்டும் கலந் துரையாடி சுமுகமாக தீர்த்துக்கொள் வது என்று தீர்மானிக்கப்பட்டது. (ப)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி

காவியமாய் நெஞ்சில் ஓவியமாய் நினைவுச்சுடர் ஆண்டு ( 01 )



அமரர்

## கதிரன் இராசதுரை

திதி : சப்தமி

குன்றின் குலவிளக்காய் மங்காத ஒளிச்சுடராய்
எத்திக்கும் திகழ்ந்தவரே எங்கள் குல விளக்கே
பாரினில் நீர் மறைந்த மாயம் என்ன.? உம்மை
எண்ணினால் எம் கண்களில் கங்கையே
ஆறுதல் சொல்ல ஆண்டவனே வந்தாலும் உம்
ஆருயிர் அன்பிற்கு ஈடாகுமா...!

இன்று (30.07.2021) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

அன்னை மடியில் 02-08-1953 | ஆண்டவன் மடியில் 10.08.2020

படித்த மகளிர் திட்டம் மிருசுவில் | நினைவுடன் மனைவி

# கண்ணீர் அஞ்சலி

தோற்றம் 06 . 03 . 1977



மறைவு 29 . 07 . 2021

## திரு. இராசா ரமேஸ்குமாரன்

வலிகாமம் கிழக்கு. கோப்பாய் பிரதேச செயலகத்தின் முன்னைநாள் அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. இராசா ரமேஸ்குமாரன் அவர்களின் மறைவிற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலாளர்
திட்டமிடல் கிளை உத்தியோகத்தர்கள்,
கிராம மட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்
வலி. கிழக்கு பிரதேச செயலகம்
கோப்பாய்

# மரண அறிவித்தல்

தோற்றம் 24 . 05 . 1926



மறைவு 24 . 07 . 2021

## திரு. கந்தப்பு குமாரசாமி

( ஓய்வு பெற்ற விவசாய திணைக்கள அதிகாரி )

அராலியைப் பிறப்பிடமாகவும் வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த **திரு. கந்தப்பு குமாரசாமி** (ஓய்வு பெற்ற விவசாய திணைக்கள அதிகாரி) அவர்கள் (24/7/2021) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற அன்னலட்சுமியின் (அராலி ) அன்புக் கணவரும், காலஞ்சென்ற மலர்விழி ஞானசேகரம் (ஓய்வு பெற்ற ஆசிரியர், அராலி), இராசேந்திரனின் (சிட்னி, அவுஸ்திரேலியா) பாசமிகு தந்தையும், திரு. மாரிமுத்து ஞானசேகரம் (ஓய்வு பெற்ற ஆசிரியர்), திருமதி. குமுதினி இராசேந்திரன் (சிட்னி, அவுஸ்திரேலியா), ஆகியோரின் மாமனாரும், தக்ஷினா, மகேஷ் ஆகியோரின் அப்பப்பாவும் காலஞ்சென்ற கந்தப்பு சுப்பிரமணியத்தின் (HNB) தம்பியும், திருமதி. நாகரட்ணம் கந்தையாவின் (துங்கம், அராலி / கனடா) அன்பு அண்ணனும், காலஞ்சென்ற சிவக்கொழுந்து சுப்பிரமணியம், Dr. நாகலிங்கம் கந்தையா (ஓய்வு பெற்ற மருத்துவர், அராலி/கனடா), திரு. நாகலிங்கம் கணபதிப்பிள்ளை (சிட்னி, அவுஸ்திரேலியா), Dr. (திருமதி) தவமணி கணபதிப்பிள்ளை (சிட்னி, அவுஸ்திரேலியா) ஆகியோரின் மைத்துனரும் ஆவார். அன்னாரின் பூதவுடல் 25/7/2021 ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

தகவல் :
கு.இராசேந்திரன், திரு. சுந்தரசிவம், திருமதி வதனி சுந்தரசிவம் & திரு லவன் சோமசேகரம்

# மரண அறிவித்தல்

தோற்றம் 05 . 08 . 1930



மறைவு 29 . 07 . 2021

## திருமதி சின்னத்துரை சிவக்கொழுந்து

புங்குடுதீவு 8ம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் 19,பிரம்படி லேன் ,கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட **திருமதி சின்னத்துரை சிவக்கொழுந்து** நேற்று (29.07.2021) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா செல்லாச்சி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான விஸ்வலிங்கம் செல்லாச்சி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சின்னத்துரையின் அன்பு மனைவியும், நாகேஸ்வரி (Swiss) ,இராஜேஸ்வரி(Srilanka) நாகரத்தினம் (Swiss), ஜெகதீஸ்வரி (Srilanka), செந்தமிழ்செல்வன் (Swiss) ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்றவர்களான சண்முகலிங்கம், தேவராசா, நாகேஸ்வரன் மற்றும் கோமலாம்பிகை, விமலாதேவி ஆகியோரின் பாசமிகு மாமியும், காலஞ்சென்றவர்களான சுந்தரம்பிள்ளை, நடராசா, சுந்தரலிங்கம், கிருஸ்ணபிள்ளை, பாலாம்பிகை ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.07.2021) வெள்ளிக்கிழமை பிற்பகல் 02.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

19, பிரம்படி லேன்,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

0777 042 517
021 205 2368

தகவல் :
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

தோற்றம் 21 . 04 . 1962



மறைவு 29 . 07 . 2021

## திருமதி ஜெயக்குமார் விக்கினேஸ்வரி

தாவடியை பிறப்பிடமாகவும் கோண்டாவில் மேற்கு கரட்டி லேனை வசிப்பிடமாகவும் கொண்ட **திருமதி ஜெயக்குமார் விக்கினேஸ்வரி** நேற்று (29.07.2021) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு - பத்மாவதி தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வியும் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - நாகேஸ்வரி தம்பதியினரின் அன்பு மருமகளும் ஜெயக்குமாரின் பாசமிகு மனைவியும் மயூரன், மயூரி, காலஞ்சென்ற றஜீபன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் விக்கினேஸ்வரன், நகுலேஸ்வரி, கனகேஸ்வரி சுந்தரேஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் சண்முகராசா, செல்வராசா, யோகராசா, கணேசராசா, வசந்தகுமாரி, சந்திராதேவி, விஜயகுமாரி, ரதிக்குமாரி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.07.2021) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 2.00 மணியளவில் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



தோற்றம் 26 . 02 . 1927

மறைவு 29 . 07 . 2021

## மாணிக்கம் ஐயம்பிள்ளை

மல்வம் உடுவிலை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மாணிக்கம் ஐயம்பிள்ளை நேற்று (29.07.2021) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாணிக்கம் - சின்னாச்சி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வைத்தி - பாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும், பரமநாயகியின் கணவரும், காலஞ்சென்றவர்களான திரேசம்மா, சின்னம்மா மற்றும் தேவி ஆகியோரின் சகோதரனும், தேவநாயகி, புஸ்பநாயகி, அருந்தா, சந்திரநாயகி, ஜெயந்தி (swiss), கிறிஸ்ரி நாதன், செல்வராசா, செல்வராணி, அனுஷா ஆகியோரின் பாசமிகு தந்தையும், செல்வராசா (செட்டியார்), லவன், காலஞ்சென்ற ஞானப்பிரகாசம், இருதயநாதன், பாலச்சந்திரன் (Swiss), ஜெயறூபி, சுபர்சினி (France), அன்ரன்லீனஸ் (பிரதேச சபை உறுப்பினர் - சுன்னாகம்), கொலின்ஸ் (Denmark) ஆகியோரின் பாசமிகு மாமனும் ஆவார்.


அன்னாரின் இரங்கல் திருப்பலி மல்வம் திருக்குடும்ப ஆலயத்தில் இன்று (30.07.2021) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டு மல்வம் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**ஞானப்பிரகாசர் வீதி,**
**மல்வம், உடுவில்.**

**தகவல் :**
**குடும்பத்தினர்**

தொடர்புகளுக்கு: **077 062 0650, 0033 698 962 528, 0041 787 343 351, 0045 816 13770**

# மரண அறிவித்தல்



## திரு. கந்தன் இராசதுரை

நாவற்குழி கிழக்கு வேலம்பிராயை பிறப்பிடமாகவும் கைதடி தெற்கு A.P.C வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட **திரு. கந்தன் இராசதுரை** நேற்று (29.07.2021) வியாழக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் சந்திரகுமாரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான கந்தன் - சின்னப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கதிரன் - சின்னக்குட்டி தம்பதியினரின் பாசமிகு மருமகனும் பவளம், ஐயாத்துரை, கமலம், தவமணி, பகவதி, துரைசிங்கம், ஜெயராசிங்கம், உலகநாதன், தங்கமலர், இந்திரராசா, இராசமணி ஆகியோரின் பாசமிகு சகோதரனும் கிட்டிணன், சிவலிங்கம் ஆகியோரின் மைத்துனரும் ராஜ்குமார், ராஜதீபன், அனுஷா, லக்ஷிகா ஆகியோரின் பாசமிகு தந்தையும் பிரதா, பிரியா, லோகநாதன், மயூரன் அவர்களின் அன்பு மிகுந்த மாமனாரும் நிலக்ஷனா, ஆருயன், அட்ஷயன், டிவேனிகா, வேலன், ஆழ்வான், மிலோஜன், லக்ஷாயினி, மிதுயன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.07.2021) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக வேலம்பிராய் பிணமுருங்கை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல் :**
**குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்



தோற்றம் 29 . 04 . 1982

மறைவு 29 . 07 . 2021

## திரு. சிவஞானசுந்தரம் காந்தமயூரன்
### (மயூரன்)

புங்குடுதீவு 10ம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் சிவன்பண்ணை வீதி யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட **திரு. சிவஞானசுந்தரம் காந்தமயூரன் (மயூரன்)** நேற்று (29.07.2021) வியாழக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் சிவஞானசுந்தரம் காலஞ்சென்ற நித்தியலட்சுமி ஆகியோரின் அன்பு மகனும் காலஞ்சென்ற தேவதாசன் - கலைமகள் ஆகியோரின் மருமகனும் கமலலோஜினியின் ஆருயிர்க் கணவரும் அனித்தன், சாருஜன், கீர்த்திகா ஆகியோரின் அன்புத் தந்தையும் காந்தரோகினி, சிவாயினி, கிஷாந்தினி ஆகியோரின் அன்பு சகோதரரும் பிரபாகரன், கபில்தாஸ், பரணிதரன், கரன், விஜயன், கமல், சர்வா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் இல்லமான இல. 29, சிவன்பண்ணை வீதி யாழ்ப்பாணத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக இன்று (30.07.2021) வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் வில்லூன்றி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**Covid 19 நடைமுறைகளுக்கு அமைவாக நடைபெறும்.**

**077 288 0152**
**077 623 4204**
**077 468 3354**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

# மரண அறிவித்தல்



தோற்றம் 22 . 06 . 1989

மறைவு 29 . 07 . 2021

## திரு. பாலசுப்பிரமணியம் செந்தூரன்
### ( ஆசிரியர் - யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி )

யாழ். கச்சாய் தெற்கு கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும் புலுட்டையன் பிள்ளையார் வீதி, கல்வயலை வசிப்பிடமாகவும் கொண்ட **திரு. பாலசுப்பிரமணியம் செந்தூரன்** நேற்று (29.07.2021) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் - சறோஜாதேவியின் கனிஷ்ட புத்திரனும் திரு.திருமதி முருகையா - சந்திராதேவியின் மருமகனும் சௌமியா (தபாலதிபர், தபாலகம் - சாவகச்சேரி) அவர்களின் பாசமிகு கணவரும் அக்ஷைனியின் பாசமிகு தந்தையும் அபிராமி ஈஸ்வரன் (பிரான்ஸ்), பா.ஐங்கரன் (பொலிஸ் உத்தியோகத்தர்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஈஸ்வரன் (பிரான்ஸ்), பவித்திரா (ஆசிரியை - முல்லைத்தீவு பாரதி வித்தியாலயம்), பிரசன்னா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.07.2021) வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் பிற்பகல் 2.00 மணியளவில் தகனக்கிரியைக்காக கச்சாய் எறியால்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கச்சாய் தெற்கு,**
**கொடிகாமம்**

**தகவல் :**
**குடும்பத்தினர்**
**077 170 3812 ( சகோதரன் )**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னார் மாவட்டத்தில் உரத்துக்கு தட்டுப்பாடு

மன்னார்,ஜுலை 30

நாட்டில் சேதனப் பசளை உற்பத்திகளை ஊக்குவிக்கும் நடவடிக்கையைத் தொடர்ந்து மன்னார் மாவட்டத்தில் பெரியளவில் உரத்தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என்று விவசாயிகள் தெரிவித்துள்ளனர். அவர்கள் மேலும் தெரிவிக்கையில், ஒரு அந்தர் உரம் 6 ஆயிரம் ரூபாவுக்கு மேல் விற்பனை செய்யப்படுகிறது. பெரிய கடைக்காரர்கள் சிலர் உரங்களை பதுக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். இதனால் சிறுபோக நெற் பயிர்களுக்கும் மேட்டு நில பயிர்களுக்கும் தேவையான அளவு பசளைகள் போடப்படாததால் விளைச்சல்கள் குறைவாகவே காணப்படுகின்றன. விவசாய நடவடிக்கைகள் பாதிக்கப்படும் வகையில் உர வகைகளை பதுக்குபவர்களை உரிய அதிகாரிகள் அடையாளம் கண்டு சட்டத்தின் முன் நிறுத்தி தண்டனை பெற்றுக்கொடுக்க வேண்டும். என்றனர்.(ஜ-213)


## தேவை

**காத்தோட்டிக்காய்** தேவை
(உடனடியாக) நல்ல விலைக்கு வாங்கப்படும்
தொடர்பு: 074 116 1955

## வேலைவாய்ப்பு

புத்தளம் மாவட்டத்தில் இயங்கும் எமது தொழிற்சாலைக்கு வேலையாட்கள் தேவை. நிரந்தர வேலை, சம்பளம்
35,000/= + OT
உணவு தங்குமிட வசதி தரப்படும்.
தொடர்பு
077 0079751 / 0777 395324 / 077 4231332

## தேவை

வெள்ளவத்தையில் இரண்டு அறை அல்லது மூன்று அறை வீடு உறுதி, வாகன தரிப்பிடத்துடன் வாங்குவதற்கு தேவை.
தொடர்பு : 070 1788 354

## விற்பனைக்கு

CD 125 (GV - XXXX) Benly மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு : 077 44 711 22


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

## ஏலவிற்பனை

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் விவசாய பீடத்தின் விலங்கு விஞ்ஞானப் பண்ணை. அறிவியல்நகர். கிளிநொச்சியில் பின்வரும் கால்நடைகள் 04.08.2021 அன்று புதன்கிழமை ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

ஆடுகள்:-

| அடையாள இலக்கம் | இனம் | வயது | கடா/மறி |
|---|---|---|---|
| 0004 | ஜமுனாபாரிகலப்பு | 6.4வருடங்கள் | மறி |
| 0005 | ஜமுனாபாரிகலப்பு | 6.4வருடங்கள் | மறி |
| 0013 | ஜமுனாபாரிகலப்பு | 4.1வருடங்கள் | மறி |
| 0022 | சானன் கலப்பு | 2.5 வருடங்கள் | கடா |
| 0023 | ஜமுனாபாரிகலப்பு | 2.5 வருடங்கள் | மறி |
| 0024 | சாணன் கலப்பு | 2.5 வருடங்கள் | மறி |
| 0025 | ஜமுனாபாரிகலப்பு | 2.5 வருடங்கள் | கடா |
| 0027 | ஜமுனாபாரிகலப்பு | 2.4 வருடங்கள் | கடா |
| 0030 | ஜமுனாபாரிகலப்பு | 2.5 வருடங்கள் | மறி |
| 0031 | ஜமுனாபாரிகலப்பு | 2.5 வருடங்கள் | மறி |
| 0033 | சானைன் கலப்பு | 2.4 வருடங்கள் | கடா |

செம்மறிஆடுகள்:-

| அடையாள இலக்கம் | இனம் | வயது | கடா/மறி |
|---|---|---|---|
| 0006 | ரெட் பானுார் கலப்பு | 5.1வருடங்கள் | மறி |
| 0007 | ரெட் பானுார் கலப்பு | 5.4வருடங்கள் | கடா |
| 0009 | ரெட் பானுார் கலப்பு | 5.4வருடங்கள் | கடா |
| 0012 | ரெட் பானுார் கலப்பு | 5.1வருடங்கள் | கடா |
| 0020 | ரெட் பானுார் கலப்பு | 3.8வருடங்கள் | மறி |
| 0028 | ரெட் பானுார் கலப்பு | 2.6வருடங்கள் | கடா |
| 0029 | ரெட் பானுார் கலப்பு | 1.4வருடங்கள் | கடா |
| 0031 | ரெட் பானுார் கலப்பு | 1.4வருடங்கள் | கடா |

மாடுகள்:-

| அடையாள இலக்கம் | இனம் | வயது | நாம்பன் /பசு |
|---|---|---|---|
| 0009 | சகிவால்கலப்பு | 4.1வருடங்கள் | நாம்பன் |
| 0012 | சகிவால் கலப்பு | 3.4வருடங்கள் | நாம்பன் |
| 0013 | ஜேர்சிகலப்பு | 2.10வருடங்கள் | நாம்பன் |
| 0014 | ஜேர்சிகலப்பு | 2.4வருடங்கள் | நாம்பன் |

இவ் ஏல விற்பனையில் கால்நடைகளை வாங்குவதற்கு விரும்புவோர் 02.08.2021 (திங்கட் கிழமை) 10.30மணிக்கு விவசாய பீடத்தின் விலங்கு விஞ்ஞானப் பண்ணை. அறிவியல் நகர். கிளிநொச்சியில் கால்நடைகளை பார்வையிடலாம். பார்வையிட்டபின்னர் மீளப்பெறமுடியாத பதிவுக் கட்டணமாக ரூபா 500.00 இனைச் செலுத்தி பற்றுச்சீட்டைப் பெற்றுக்கொள்ள வேண்டும். பற்றுச்சீட்டைபெற்றுக் கொண்டவர்கள் மட்டுமே ஏலவிற்பனையில் பங்குகொள்ள முடியும். ஏலவிற்பனைக்கு வருகைதரும்போது பற்றுச்சீட்டைக் கொண்டுவருதல் அவசியமானதாகும். ஏலவிற்பனையானது 04.08.2021 புதன்கிழமைகாலை 10.00 மணிக்கு விவசாயபீடத்தின் விலங்குவிஞ்ஞானப் பண்ணை. அறிவியல்நகர். கிளிநொச்சியில் நடைபெறும். ஏலத்தில் வெற்றிபெறும் ஏலதாரர் தாம் கொள்வனவு செய்த கால்நடைகளுக்கான முழுத்தொகையையும் உடனடியாகச் செலுத்தி அன்றையதினமே கால்நடைகளை கொண்டுசெல்லவேண்டும்.

குறிப்பு:- நாட்டில் ஏற்பட்டுள்ள Covid19 காரணமாக சுகாதார நடைமுறைகள் இறுக்கமாக கடைப்பிடிக்கப்படும்.

**பதிவாளர்**

*அங்கஜனின்...*

பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு இணைத் தலைவர் இ.அங்கஜனின் அலுவலகத்தில் கடமை புரியும் உத்தியோகத்தர்களுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு, யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள சகல பிரதேச செயலர்களுக்கும், மாவட்டச் செயலர் கடிதம் அனுப்பி வைத்துள்ளார்.

யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு இணைத் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அங்கஜன் இராமநாதன், யாழ்ப்பாண மாவட்டச் செயலருக்கு கடந்த 19ஆம் திகதி மீள் நினைவூட்டல் கடிதம் அனுப்பி வைத்துள்ளார்.

அதில் 2 லட்சம் சமுர்த்திப் பயனாளி குடும்பங்களை மையமாகக் கொண்ட முழுமையான வீட்டு பொருளாதார மேம்பாடு, 500 சௌபாக்கியா சமுர்த்தி உற்பத்தி கிராமங்களை வலுவூட்டல், வீட்டு பொருளாதாரம் மற்றும் ஊட்டச்சத்தை மேம்படுத்தும் வீட்டு பயிர் வளர்ப்பு நிகழ்ச்சி திட்டம், இளம் பெண் தொழில் முயற்சியாளர் நிகழ்ச்சி திட்டம், இதனுடன் தொடர்புடைய காலத்துக்கு காலம் சமுர்த்தி திணைக்களத்தால் அறிமுகப்படுத்தப்படும் வேலைத் திட்டம் தொடர்பாக, சகல பிரதேச செயலர் பிரிவுக்கும் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுத் தலைவரின் உத்தியோகத்தர்கள் பயணம் செய்யவுள்ளதால் சகல பிரதேச செயலகங்களின் ஒருங்கிணைப்பையும் ஒத்துழைப்பையும் பெறுவதற்கு பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்குமாறு அந்தக் கடிதத்தில் இ.அங்கஜன் கோரியிருந்தார். இதற்கு அமைவாகச் செயற்படுமாறும், மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு அலுவலகத்தில் கடமை புரியும் உத்தியோகத்தர்களுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் மாவட்டச் செயலர் க.மகேசன், பிரதேச செயலர்களுக்கு கடிதம் அனுப்பியுள்ளார். (ஒ,7)


TOKYO SUPERMIX Concreting Confidence | TOKYO CEMENT COMPANY (LANKA) PLC

## உடனடி வேலைவாய்ப்பு

- நிறுவனம் :- Tokyo Supermix Pvt Ltd
  எழுதுமட்டுவாழ் தெற்கு
  மிருசுவில், யாழ்ப்பாணம்
- வெற்றிடம் :- Operation Officer
- தகைமை :-1. A/L தகைமை
  2. கணினி அறிவு
  3. வயதெல்லை - 25-35
  4. அனுபவம் - குறைந்தது 02 வருடம்
  5. தென்மராட்சி பிரதேசத்திற்குட்பட்ட பகுதிகளில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

குறிப்பு :- மேலே குறிப்பிடப்பட்ட வெற்றிடத்திற்கு தகுதியானவர்கள் கீழ் உள்ள E-Mail முகவரிக்கு சுயவிபரக்கோவையை 06.08.2021 திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவும்.
E-Mail -supermix.jaffna@tokyocement.lk

முகவரி: டோக்கியோ ரெடிமிக்ஸ் பிளாண்ட் மிருசுவில், யாழ்ப்பாணம்.


## சேவை நலன் பாராட்டும் நன்றி நவிலலும்




### திரு. ஜெகதீசசிங்கம் சத்தியேந்திரன் J.P

எமது அலுவலகத்தில் உதவி பிராந்திய முகாமையாளராகவும், தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தராகவும் கடமையாற்றிய திரு. ஜெகதீசசிங்கம் சத்தியேந்திரன் அவர்கள் 35 வருட சேவையினை தென்னைப் பயிர்ச் செய்கை சபையில் நிறைவு செய்து 29.07.2021 அன்று ஓய்வு பெற்று செல்வதையிட்டு அவர்களது சேவையினை மனதார பாராட்டுவதோடு நீண்ட தேக ஆரோக்கியத்தோடு வாழ இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வாழ்த்துவோர்
ஊழியர் நலன்புரிச்சங்கம்
யாழ்ப்பாண பிராந்திய காரியாலயம்
தென்னைப் பயிர்ச்செய்கைச் சபை
பளை - கிளிநொச்சி

Congratulations

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருத்துவருக்கு எதிராக பொதுமக்கள் ஆர்ப்பாட்டம்

கொழும்பு, ஜூலை 30

நுவரெலியா மாவட்ட மருத்துவமனையில் கடமைபுரியும் மருத்துவர் ஒருவருக்கு எதிராக, பொதுமக்கள் உடபுஸ்லாவ இராகலை பிரதான வீதியின், டெல்மார் மத்திய சந்தியில் நேற்று பெரும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இராகலை டெல்மார் தோட்டத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவர், நேற்றுமுன்தினம் இரவு மோட்டார் சைக்கிள் விபத்துக்குள்ளாகி படுகாயமடைந்துள்ளார். அவரை பிரதேச மக்கள், உடபுஸ்ஸலாவ ஆதார மருத்துவமனைக்கு முதலில் கொண்டுசென்றனர். அங்கு 2 மணித்தியாலங்களாக மருத்துவருக்காகக் காத்திருந்தபோதும், மருத்துவர் வரவில்லை. அதனால், காயமடைந்த நபரை, நுவரெலியா மாவட்ட மருத்துவமனைக்கு கொண்டுசென்றுள்ளனர். அங்கு நான்கு மணிநேரத்தின் பின்னரே இளைஞனை மருத்துவமனைக்குள் அனுமதித்துள்ளனர்.

மேலும், அங்கு வருகைதந்த மருத்துவர் ஒருவர், "நான் எஸ்டேட் மக்களுக்கு சேவை செய்ய வரவில்லை" என்று அங்கிருந்த பொதுமக்களை தரக்குறைவாகப் பேசியுள்ளார் என்றும் இதனால் இருதரப்பினருக்கும் வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது என்றும் போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் குற்றம்சாட்டினர்.

இந்தநிலையில், தோட்டத் தொழிலாளர்களை தரக்குறைவாக பேசிய மருத்துவருக்கு எதிராக மக்கள் நேற்றுப் போராட்டத்தில் குதித்தனர். அந்த மருத்துவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தனர். (த-இ)


## மரண அறிவித்தல்



**திரு. இராசா ரமேஸ்குமாரன்**

( அபிவிருத்தி உத்தியோகத்தர் - பிரதேச செயலகம் தெல்லிப்பளை - சமாதான நீதிவான் )

தோற்றம் 06.03.1977 — மறைவு 29.07.2021

தம்பாலை அச்சுவேலியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராசா ரமேஸ்குமாரன் நேற்று (29.07.2021) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசா - அன்னபூரணம் தம்பதியினரின் அன்பு மகனும் கேதீஸ்வரன், காயத்திரி (அபிவிருத்தி உத்தியோகத்தர் - மாவட்ட செயலகம் யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் நிறோஜாவின் மைத்துனரும் மார்க்கண்டு - சரஸ்வதி, காலஞ்சென்ற நல்லையா மற்றும் சரோஜா, அரியராசா - லலிதாதேவியின் பெறாமகனும் ஆவார்.

அன்னாரின இறுதிக்கிரியைகள் இன்று (30.07.2021) வெள்ளிக்கிழமை மு.ப 10.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சுகாதார நடைமுறைக்கு அமைவாக நடைபெறும்.

077 445 6672 - சகோதரன், 077 554 6405 - சகோதரி தகவல் : குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்



**திருமதி சற்குணலீலாவதி இராசரத்தினம்**

யாழ். கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும், இணுவிலை வதிவிடமாகவும் கொண்ட **திருமதி சற்குணலீலாவதி இராசரத்தினம்** அவர்கள் 26-07-2021 திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னார், காலஞ்சென்றவர்கள்ான பொன்னுச்சாமி யோகம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான தம்பிஜயா தங்கம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற இராசரத்தினம்(சின்னராசா) அவர்களின் அன்பு மனைவியும், தமிழ்ச்செல்வி, அன்பரசி, தயாநிதி (பிரதேச செயலகம், சண்டிலிப்பாய்), இராஜசேகரன், திருக்குமரன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், விக்கினேஸ்வரன், உதயணன், பத்மகுமார், கார்த்திகா, தர்ஷிகா ஆகியோரின் அன்பு மாமியும், மகேஸ்வரன்(ஓய்வுநிலை பிரதி அதிபர், யாழ் இந்துக்கல்லூரி, ஆசிரியர், ஏஞ்சல் சர்வதேச பாடசாலை, மானிப்பாய்), சறோஜினிதேவி, காலஞ்சென்றவர்களான லட்சுமிதேவி, சந்திராதேவி மற்றும் சகுந்தலாதேவி, ஜெமிலாதேவி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்ற கனகராஜா மற்றும் நவமணி, இரத்தினபூபதி, தியாகராஜா, புஸ்பராணி, காலஞ்சென்ற இந்திரபூபதி, மற்றும் பரமேஸ்வரி, பாலகிருஸ்ணன், காலஞ்சென்றவர்களான புவனேஸ்வரன், புண்ணியானந்தம் மற்றும் தர்மகுலசிங்கம், சுந்தரராஜா ஆகியோரின் அன்பு மைத்துனியும், கோபிகா- மகிந்தன், தர்மிகா, நவீன், விதுன், தீபிகன், யஸ்மினி ஆகியோரின் பாசமிகு அம்மம்மாவும், அபினன், அஞ்சனா, அஸ்வின், தருண், கவின் ஆகியோரின் பாசமிகு அப்பம்மாவும், ஹர்ஜின் அவர்களின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30/07/2021) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தாவடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இணுவில் தெற்கு — தகவல் : குடும்பத்தினர்


# நாவாந்துறையில் 6 பெண்கள் கைது

## இளைஞனின் தற்கொலைக்கு காரணமாக இருந்தார்களா?

யாழ்ப்பாணம், ஜூலை 30

யாழ்ப்பாணம் நாவாந்துறைப் பகுதியைச் சேர்ந்த ஆறு பெண்கள் நேற்றுப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். இளைஞரொருவர் தற்கொலை செய்வதற்கு அவர்கள் காரணமாக இருந்தனர் என்ற குற்றச்சாட்டு அவர்களுக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ளது. புறா வளர்ப்பில் ஈடுபடும் இளைஞர்களுக்கு இடையிலான மோதலைத் தொடர்ந்து அவர்களைச் சமரசத்துக்கு என்று அழைத்து அவர்கள் மீது கொடூர தாக்குதல் நடத்தப்பட்டது என்று முறைப்பாடு வழங்கப்பட்டுள்ளது. கண்களில் மிளகாய்த்தூள் தூவி முகத்தில் பச்சை மிளகாயும் தேய்க்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவத்தைச் செய்த பெண்கள் அதைக் காணொலியாகப் பதிவுசெய்து சமூக வலைத்தளங்களில் பரப்பியுள்ளனர். அது உள்ளூரில் அதிகம் பேசுபொருளாக இளைஞனை பலரும் கேலி செய்துள்ளனர். இதையடுத்தே அந்த இளைஞன் விரக்தியில் தற்கொலை செய்துள்ளார் என்று தெரியவருகின்றது.

அந்த இளைஞனுடன் தாக்குதலுக்கு உள்ளான ஏனைய மூன்று இளைஞர்களும் பொலிஸில் வழங்கிய முறைப்பாட்டை அடுத்து அந்த 6 பெண்களும் கைது செய்யப்பட்டுள்ளனர். இன்னும் சிலர் தலைமறைவாக உள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ம)



# சட்டவிரோத மணல் அகழ்வு: சந்தேகத்தில் 8 பேர் கைது

மன்னார்,ஜூலை 30

மன்னார் இலுப்பைக்கடவை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் சட்டவிரோதமான முறையில் மணல் அகழ்வில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் எட்டுப் பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். கடந்த 20 ஆம் திகதி தொடக்கம் கடந்த செவ்வாய்க் கிழமை வரையான காலப்பகுதியிலேயே இவர்கள் கைதுசெய்யப்பட்டனர். இவர்களிடமிருந்து 4 ரக்டர் மற்றும் 3 டிப்பர் வாகனங்களையும் பொலிஸார் கைப்பற்றினர். சந்தேகநபர்களை மன்னார் மாவட்ட நீதி மன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ஐ-213)


## மரண அறிவித்தல்

தோற்றம் 07 . 08 . 1941 — மறைவு 29 . 07 . 2021



**திரு. தம்பையா கணபதிப்பிள்ளை**

தச்சந்தோப்பை பிறப்பிடமாகவும் மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. தம்பையா கணபதிப்பிள்ளை நேற்று (29.07.2021) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பையா - சிவகொழுந்து தம்பதியினரின் மூத்த மகனும் காலஞ்சென்ற வல்லிபுரம் - அன்னமுத்து தம்பதியினரின் அன்பு மருமகனும் தங்கமலர் (தேம்பு) அவர்களின் அன்புக் கணவரும் கந்தையா, கந்தசாமி, நாகம்மா, பரமேஸ்வரி, காலஞ்சென்ற சிவபாக்கியம் அவர்களின் சகோதரரும் சுபாஸ்கரன், பன்னிருகரன், சசிகரன், சசிகலா, குகேந்தினி அவர்களின் பாசமிகு தந்தையும் பிரதீபா, அனுஜா, சண்முகதாஸ், ஞானதீபன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் சாயீசன், கஜனிகா, பிரவீஸ்கர், லக்சிகா, சாகித்தியன், தர்சினி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.07.2021) வெள்ளிக் கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இணுவில் வீதி, மானிப்பாய் — தகவல் : குடும்பத்தினர் தொடர்பு : 077 551 2943


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கடும்....

கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மத்திய நிலையத்தின் தலைவரும் இராணுவத்தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

'இலங்கையில் நாளாந்தக் கொரோனாத்தொற்றாளர்களின் எண்ணிக்கை ஒரு மாதத்தின் பின்னர் நேற்றுமுன்தினம் 1,900இனைத் தாண்டியுள்ளது. இதேவேளை, நேற்று 2,300 இற்கும் மேற்பட்ட கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இவர்கள் அனைவரும் புத்தாண்டுக் கொரோனாக் கொத்தணியுடன் தொடர்புடையவர்கள்.

சில கட்டுப்பாடுகளில் தளர்வுகள் வந்தமையால் தொற்றாளர்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கின்றது.

எனவே, மக்கள் சுகாதார விதிமுறைகளைக் கடைப்பிடித்து மிகவும் அவதானத்துடன் செயற்பட வேண்டும். இல்லையேல் இறுக்கமான கட்டுப்பாடுகளை நாம் விதிக்க வேண்டி வரும்.

கொரோனாத் தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காகப் பொதுமக்கள் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்வது அவசியமாகும்' என்றார். (ம-22)

### கொரோனா...

ளின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது. நாட்டில் மேலும் 66 பேர் கொரோனாத் தொற்றால் உயிரிழந்துள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் நேற்றிரவு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. நேற்றுமுன்தினம் உயிரிழந்த 66 பேரில் 41 ஆண்களும், 25 பெண்களும் உள்ளடங்குகின்றனர் என்று அரச தகவல் திணைக்களத்தின் அறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளது.

இதன்படி நாட்டில் பதிவான கொரோனா சாவுகளின் மொத்த எண்ணிக்கை 4 ஆயிரத்து 324ஆக உயர்வடைந்துள்ளது. (ம-22)

### யாழ்ப்பாணத்தில்...

கோட்டையைச் சேர்ந்த 79 வயதுடைய பெண் ஒருவரும், திருநெல்வேலியைச் சேர்ந்த 80 வயதுடைய ஆண் ஒருவரும், தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் பணியாற்றும் அச்சுவேலியைச் சேர்ந்த 44 வயதுடைய நபரொருவருமே உயிரிழந்தவர்கள்.

இதையடுத்து யாழ்ப்பாணத்தில் கொரோனாவால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 126ஆக உயர்ந்துள்ளது. (ம-26)

### வலிகாமம்...

மாவட்ட காணி பயன்பாட்டுக்குழு அனுமதி வழங்கியுள்ளது. யாழ்ப்பாண மாவட்ட காணி பயன்பாட்டுக்குழுக் கூட்டம் கடந்த 27ஆம் திகதி யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றது. இதன்போது வலி. வடக்கு பிரதேச செயலக காணிப் பயன்பாட்டுக் குழுக் கூட்டத்தில் கடந்த மார்ச் மாதம் 22ஆம் திகதி அனுமதி வழங்கப்பட்ட காணிக்கே, மாவட்ட காணிப் பயன்பாட்டுக்குழுவும் அனுமதி வழங்கியுள்ளது.

ஜே/225 கிராம அலுவலர் பிரிவில் 12 ஏக்கரில் அமைந்துள்ள இராணுவத்தின் 513ஆவது பிரிகேட்டுக்கே காணி வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி இராணுவ முகாம் வலி. வடக்கில் மக்கள் மீள் குடியமர்வுக்கு அனுமதிக்கப்பட்ட காலம் தொடக்கம் அமைந்துள்ளது. (ஏ.7)

### மக்களுடைய...

தளம் அமைக்கப்பட்டுள்ள மக்களின் காணியை அரசு விடுவிக்க வேண்டும் என்று நீண்டநாள்களாக வலியுறுத்தப்பட்டு வந்தது. மக்கள் பிரதிநிதிகளால் நாடாளுமன்றத்திலும் இது தொடர்பில் வலியுறுத்தப்பட்டிருந்தது.

இவ்வாறிருக்க, குறித்த காணியை நிரந்தரமாக சுவீகரிக்கும் முயற்சிகள் இடம்பெற்று வந்தன. அதன்படி நேற்று குறித்த காணிகளை சுவீகரிப்புக்காக அளவீடு செய்யும் பணி இடம்பெறும் என்று ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில், குறித்த அளவீட்டை தடுத்து நிறுத்துவதற்காக நாடாளுமன்ற உறுப்பினர்களும், மக்களும், தமிழ்த் தேசியப் பற்றாளர்களும் அந்தப் பகுதியில் ஒன்றுகூடி காணி அளவீட்டுக்கு எதிராகக் குரல் கொடுத்தனர்.

இதையடுத்து குறித்த பகுதியில் பொலிஸார், கலகம் அடக்கும் படையினர் பாதுகாப்புக்காகக் குவிக்கப்பட்டனர்.

இதற்கிடையில் போராட்டக்காரர்களிடம் கருத்துத் தெரிவித்த நில அளவைத் திணைக்களத்தினர், மக்கள் எதிர்ப்பை வெளிப்படுத்துவதால், காணி அளவீடு கைவிடப்பட்டு காணி உரிமையாளர்கள் மாவட்டச் செயலருடனும் நாடாளுமன்ற உறுப்பினர்களுடனும் கலந்துரையாடி ஒரு முடிவுக்கு வரவேண்டும் என்று தெரிவித்துள்ளனர்.

இதனால் காணி அளவீடு கைவிடப்பட்டது என்று மக்கள் தம் போராட்டத்தைக் கைவிட்டதும், காணி அளவீட்டாளர்கள் கடற்படையினரின் வாகனங்களில் ஏறிச்சென்று அளவீட்டை முன்னெடுத்துள்ளனர். இதனால் அந்தப் பகுதியில் சுமார் 4 மணிநேரத்துக்கும் மேலாக அமைதியின்மையும் போக்குவரத்துத் தடங்கலும் இருந்தது.

இந்தப் போராட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களான சாள்ஸ்நிர்மலநாதன், வினோநோகராதலிங்கம், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், கஜேந்திரன், மற்றும் முன்னாள் மாகாணசபை உறுப்பினர் து.ரவிகரன், சிவாஜிலிங்கம், உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர். (ம-19)

### தோட்டக்.....

குலைந்த நிலையில் இளைஞன் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

சுன்னாகம் மேற்கு ஊரெழுவை சேர்ந்த இராசதுரை சுதாகரன் (வயது 36) எனும் இளைஞனே சடலமாக மீட்கப்பட்டுள்ளார். குறித்த தோட்டக் கிணற்றில் சடலம் காணப்படுகின்றது என்று சுன்னாகம் பொலிஸாருக்கு வழங்கப்பட்ட தகவலின் பிரகாரம் அந்தப் பகுதிக்குச் சென்ற பொலிஸார் மேலதிக நடவடிக்கைகளின் அடிப்படையில் சடலத்தை மீட்டுள்ளனர். சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (ம-26)

### மூதாட்டியின்...

டுத்து இரண்டு தடுப்பூசிகள் ஏற்றப்பட்ட சம்பவம் பதிவாகியுள்ளது என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

கொழும்புத்துறையில் ஜே/61 கிராம அலுவலர் பிரிவு மக்களுக்கு யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரியில் வைத்து தடுப்பூசி ஏற்றப்பட்டது. இதன்போது 66 வயதுடைய மூதாட்டிக்கு தாதி ஒருவர் தடுப்பூசி ஏற்றிவிட்டுச் சென்றுவிட அதை அறியாத பிறிதொரு தாதி மற்றைய கையில் இன்னுமொரு தடுப்பூசியைச் செலுத்தியுள்ளார் என்று தெரியவருகின்றது.

தவறுதலாக இடம்பெற்றதாக கூறப்படும் இந்தச் சம்பவத்தில் மூதாட்டிக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை. அவ்வாறு ஏதாவது மாற்று அறிகுறிகள் தென்பட்டால் உடனடியாக மருத்துவமனைக்கு வருமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது என்றும் சுகாதாரத்துறை வட்டாரங்கள் தெரிவித்தன. (ம)

### 2000 கடந்தது....

எண்ணிக்கை 2 ஆயிரத்தைக் கடந்துள்ளது. நேற்று 2 ஆயிரத்து 329 பேர் கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அரச தகவல் திணைக்களம் நேற்றிரவு விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி நாட்டில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 3 இலட்சத்து 4 ஆயிரத்து 161ஆக அதிகரித்துள்ளது.

அத்துடன், கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 1,641 பேர் நேற்று குணமடைந்து வீடு திரும்பினர். அதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து 73 ஆயிரத்து 496ஆக உயர்வடைந்துள்ளது. (22)

### கொரோனாவால்...

தொற்றால் உயிரிழந்துள்ளார். முல்லைத்தீவு நகர் வண்ணாங்குளத்தைச் சேர்ந்த 61 வயதுடைய நபரொருவரே கொரோனாவால் உயிரிழந்துள்ளார்.

கடந்த 21ஆம் திகதி கொரோனாத் தொற்றுடன் இவர் அடையாளம் காணப்பட்டு சிகிச்சை பெற்றுவந்த நிலையில் சிகிச்சை பயனளிக்காமல் நேற்று உயிரிழந்தார். (ம-19)

### சக பெண்....

தானே கத்தியால் குத்தி தற்கொலைக்கும் முயன்றுள்ளார். படுகாயங்களுக்கு உள்ளான இருவரும் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். யாழில் உள்ள அரச திணைக்களம் ஒன்றில் நேற்றைய தினம் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது;

திணைக்களத்தில் பணியாற்றி வரும் ஆண் உத்தியோகத்தர், அங்கு கடமை புரியும் சக பெண் உத்தியோகத்தர் ஒருவரை ஒருதலையாகக் காதலித்து வந்துள்ளார். அவரின் காதலை பெண் உத்தியோகத்தர் ஏற்க மறுத்துவந்த நிலையில், அவர் அந்தப் பெண்ணுக்குத் தொந்தரவு கொடுத்து வந்துள்ளார்.

தொந்தரவு தாங்க முடியாத அந்தப் பெண் ஒரு கட்டத்தில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். முறைப்பாட்டின் பிரகாரம், விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் ஆண் உத்தியோகத்தரை அழைத்து கடுமையாக எச்சரித்து அனுப்பி வைத்துள்ளனர்.

இந்த நிலையில் நேற்றையதினம் அலுவலகத்தில் இருவரும் கடமையில் இருந்துள்ளனர். திடீரென ஆண் உத்தியோகத்தர், குறித்த பெண் மீது சரமாரியாக கத்தியால் வெட்டித் தாக்குதல் நடத்திவிட்டு, அலுவலக மலசல கூடத்துக்குள் சென்று தாழிட்டுள்ளார்.

சம்பவத்தை அடுத்து இரத்த வெள்ளத்தில் கிடந்த பெண் அலுவலரை அங்கு கடமையில் இருந்த சக அலுவலர்கள் மீட்டு யாழ்.போதனா வைத்திய சாலைக்கு கொண்டு சென்றனர்.

அதேவேளை, அந்தப் பகுதியால் சிவில் உடையில் சென்ற பொலிஸார் சம்பவம் தொடர்பில் அறிந்து அலுவலகத்துக்குள் சென்றபோது, கத்தியால் வெட்டிய நபர் மலசல கூடத்துக்குள் தாழிட்டு இருப்பதனை அறிந்து, அவரை வெளியே வருமாறு அழைத்துள்ளனர். எந்த சத்தமும் இல்லாத நிலையில் கதவை உடைத்துத் திறந்த போது, அந்த நபர் தன்னை தானே கத்தியால் குத்தி இரத்த வெள்ளத்தில் கிடந்துள்ளார். பின்னர் அவர் அங்கிருந்து மீட்கப்பட்டு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். யாழ்ப்பாணப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-26)

### அரசுக்கு...

தலைமையிலான சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குக் கிடைக்கப் போவது ஒன்றும் இல்லை. அரசுக்கு எதிரான மக்கள் அலையொன்று உருவாகிக் கொண்டுள்ள நிலையில், மக்களின் பக்கமே நாம் நிற்க வேண்டும் இவ்வாறு சுதந்திரக் கட்சியின் ஆலோசகரும் அக்கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளருமான பேராசிரியர் ரோஹண லக்ஸ்மன் பியதாஸ தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

'கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போதும் பொதுத் தேர்தலின் போதும் எமக்கு கொடுத்த வாக்குறுதிகள் அனைத்தும் இன்று மீறப்பட்டு சுதந்திரக் கட்சியை அரசுக்குள் ஓரங்கட்டும் நிலைமையே ஏற்பட்டுள்ளது.

ஜனாதிபதியும் பிரதமரும் எம்மை ஏமாற்றியுள்ளனர். அவ்வாறான நிலையில் சிறிலங்கா பொதுஜன பெரமுனவினரின் தவறான கருத்துக்கள், சிறிலங்கா சுதந்திர கட்சிக்கு எதிரான பரப்புரைகள் அரசுக்குள் எம்மை நடத்தும் விதம் குறித்து இப்போது ஜனாதிபதியுடன் பேச்சு நடத்துவதில் எந்த அர்த்தமும் இல்லை என்பதே எமது நிலைப்பாடு.

இந்த நிலைப்பாட்டில் கட்சியில் பலர் உள்ளனர். இறுதியாக ஜனாதிபதியுடன் பேச்சுக்குச் சென்றவர்களில் ஒரு சிலரும் இதே நிலைப்பாட்டை ஆரம்பத்தில் கொண்டிருந்தனர். அரசுக்குள் எமது இருப்பைத் தக்க வைத்துக்கொள்வதை விடவும், மக்களிடம் எமது கட்சியைக் கொண்டு சேர்க்க வேண்டும். மீண்டும் தனிக் கட்சியாக நாம் பயணிக்க வேண்டும் என்பதே நாம் இப்போது முன்னெடுக்க வேண்டிய வேலைத்திட்டமாகும். இது குறித்து இப்போது தீர்மானம் எடுத்தால் எம்மால் அடுத்த தேர்தல்களில் பலமான கட்சியாக உருவாக முடியும். பழைய சுதந்திரக் கட்சிக்காரர்களை ஒன்றிணைக்கவும் முடியும்'- என்றார். (ம-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பிறந்தநாள் நாயகன் வனிந்து ஹசரன்க!

கொழும்பு, ஜூலை 30

இலங்கை அணியின் சகலதுறை வீரர் வனிந்து ஹசரன்க நேற்று தனது பிறந்த தினத்தன்று சாதனையொன்றை நிலைநாட்டியுள்ளார்.

பிறந்த நாளில் சிறந்த பெறுபேற்றை எட்டிய வீரர் என்பதே அந்தச் சாதனை.

இதன்படி 4 பந்துப்பரிமாற்றங்கள் வீசிய ஹசரன்க 9 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து 4 இலக்கு களைக் கைப்பற்றியிருந்தார்.

அத்துடன் நேற்றைய ஆட்டத்தின் நாய கனாகவும் தொடராட்ட நாயகனாகவும் தெரிவு செய்யப்பட்டிருந்தார். (ம)

# சுருண்டது இந்தியா தொடர் இலங்கைக்கு!

**கொழும்பு, ஜூலை 30**

**இந்தியாவுக்கு எதிரான இறுதி ரி20 ஆட்டத்திலும் வெற் றிபெற்று தொடரை 2:1 என்ற அடிப்படையில் கைப்பற்றி யது இலங்கை அணி.**

நேற்றுமுன்தினம் நடைபெற்ற இரண் டாவது ரி20 ஆட்டத்தில் வெற்றிபெற்ற இலங்கை அணி தொடரை 1:1 என்று சமன்செய்திருந்த நிலையில் கிண்ணத் தைத் தீர்மானிக்கும் இறுதியாட்டம் நேற்று இடம்பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணிக்கு ஆரம்பமே படுமோசமாக அமைந்தது.

ஆரம்ப வீரரும் அணித் தலைவரு மான தவான் ஓட்டமெதையும் பெறாது ஆட்டமிழந்தார். இந்திய முன்வரிசை யும் தொடர்ந்து தடுமாற 25 ஓட்டங்க ளுக்கு 4 இலக்குகளை இழந்தது இந் திய அணி.

4 இலக்குகள் வீழ்ந்ததன் பின்னர் அந்த அணியின் துடுப்பாட்ட வரிசை முடிவு கண்டது.

முடிவில் 8 இலக்குகளை இழந்து வெறும் 81 ஓட்டங்களை மட்டுமே இந் தியாவால் பெறமுடிந்தது. குல்தீப் யாதவ் பெற்ற 23 ஓட்டங்கள்தான் அதிகபட்சம்.

பந்துவீச்சில் வனிந்து ஹசரன்க 4 இலக்குகளையும், தசுன் சானக 2 இலக்குகளையும் கைப்பற்றினர். பதி லுக்குக் களமிறங்கிய இலங்கை அணி வெறும் 3 இலக்குகளை இழந்து வெற் றிபெற்றது.

தனஞ்சய டி சில்வா 23 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் ராகுல் சகர் 3 இலக்குகளைக் கைப்பற்றினார். (ம)

English Classes
Gr 1 - OL
Grammar With Syllabus
(வீடு வந்து கற்பிக்கப்படும்)
T.P. No: 077 331 4608

## 'பயோ பபுள்' விதிமீறல்

# வீரர்கள் மூவருக்கும் தடைக்காலம் நீடிப்பு

### 25,000 டொலர் தண்டமும் விதிப்பு

கொழும்பு, ஜூலை 30




இங்கிலாந்துக்கு எதிரான தொட ரின்போது வீரர்களுக்கான 'பயோ பபுள்' விதியை மீறிய குற்றத்துக்காக குசல் மென் டிஸ், குணதிலக இருவருக்கும் தலா 2 ஆண்டுகள் தடையும், டிக்வெல்லவுக்கு ஒன்றரை ஆண்டுகள் தடையும் விதிக்கப் பட்டுள்ளது.

இலங்கை கிரிக்கெட் சபையால் நியமிக்கப்பட்ட ஒழுக்காற்றுக் குழு இந்த விவகாரம் தொடர்பில் விசாரணை நடத்தியது. இதன் அடிப்படையி லேயே இந்தத் தடை விதிக்கப்பட்டுள்ளது. அத்துடன் மூன்று வீரர்களுக்கும் சேர்த்து 25 ஆயிரம் அமெரிக்க டொலர்கள் தண்டமும் விதிக்கப்பட்டது. (ம)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம் 14.10.1960



மறைவு 30.06.2021

# பிலிப் றோசாறோ

எங்கள் தந்தையின் திடீர் மரணச்செய்திகேட்டு கொரோனா (Coivid 19) கெடுபிடி களையும் தாண்டி எமது இல்லம் தேடிவந்து ஆறுதல் கூறிய அனைத்து உறவுகளுக்கும். நல் உள்ளங்களிற்கும் எமது கோடான கோடி நன்றிகள். தொலைபேசியூடாகவும். சமூக ஊடகங்களினூடாகவும். அனுதாபங்களையும். ஆறுதல்களையும் தெரிவித்தோரிற்கும். நேரில் வந்தும். தொலைபேசியூடாகவும் எமக்கு ஆறுதல் கூறி தமது செபங்களில் எங்கள் தந்தைக்காக செபித்த அருட்தந்தையர்கட்கும். அருட்சகோதரிகளிற்கும் எமது நெஞ்சார்ந்த நன்றிகள். வைத்தியசாலையில் எமது தந்தைக்கு சிகிச்சை அளித்து பராமரித்த வைத்தி யர்களுக்கும். தாதியர்க்கும். ஊழியர்களுக்கும் நன்றிகள். எமது தந்தை வைத்தியசாலை யில் இருந்தவேளை தொலைபேசியூடாக யாழ். போதனா வைத்தியசாலை வைத்தி யர்களுடன் தொடர்பிலிருந்து எமக்கு வைத்திய விவரங்களையும். ஆலோசனைகளையும் வழங்கிய வைத்தியர் நிக்சன் திருமாறன் (லண்டன்) மற்றும் வைத்தியர் மகிழ்நங்கை (கொழும்பு) ஆகியோர்க்கும் எமது இதயம் கனிந்த நன்றிகள். எமது தந்தையின் பூதவுட லுக்கான ஆன்மீக கடமைகளை நிறைவேற்றிய ஆன்மீகக் குரு அருட்பணி அருள்சுதர்சன் அ.ம.தி அடிகளாருக்கும். எமக்கு உதவிகளைப்புரிந்த வைத்தியசாலை சுகாதாரப் பரிசோதகர்களிற்கும் எமது இதயம் கனிந்த நன்றிகள். எமது தந்தையின் சாம்பலை ஆலயத்திற்கு எடுத்து வந்து வழிபாடுகளை மேற்கொண்டு அடக்கம் செய்ய அனுமதியளித்து உதவிய யாழ். மறைமாவட்ட குருமுதல்வர் அவர்களுக்கும். குருநகர் புனித யாகப்பர் ஆலய மற்றும் யாழ். பேராலய பங்குத்தந்தையர்களுக்கும். உதவிப் பங்குத் தந்தையர்களுக்கும் மனமார்ந்த நன்றிகள் அத்துடன் எமது தந்தையின் இறுதி வழிபாட்டிற்காக சேமக்காலைக்கு வருகை தந்த அருட்தந்தையர்களுக்கும். உறவினர் களுக்கும். நண்பர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

"வாழ்வு தந்து வழிகாட்டிய எங்கள் தந்தையே - இன்று
துயரம் தந்து எம்மைக் கதறவிட்டு சென்றதெங்கே?
இறைபணியே மேன்மை என்றாய் - அவர்
திருவடி நிழலில் இளைப்பாற வேண்டுகின்றோம்"

8/2, கொண்டடி வீதி,
குருநகர் யாழ்ப்பாணம்.
077 088 0047
077 420 0155

மனைவி,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 30.07.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.